

# மானுடத்தை நேசித்த மானுடன்!

- டிலிப்குமார் -

நான் சந்தித்தவர்களில் என் உணர்வின் ஆழம்வரை சென்று நிலைகொண்டவர்கள் சிலரே. அவர்களில் செழியன் பெற்றிருக்கும் இடம் தனித்துவமானது. செழியன் களமாடிய பரப்புகள் பல. தான் சார்ந்த சமூகம் தொடர்பான தீராத ஈர்ப்பின் வழியாகவே ஒரு போராட்டக்காரனாக எதிர்கொண்ட களங்களின் வழியே அவர் பயணித்தார். நசுக்கப்பட்ட, நலிந்த குரல்களின் ஒலியாகவே அவர் இறுதிவரை இருக்க விரும்பினார். இறக்கும் வரை அவ்வாறே இருந்தார்.

இந்தப் பயணங்கள் வழியே செழியன் சந்தித்த மனிதர்களும் சம்பாதித்த நட்பும் ஏராளம். இவ்வாறான தடங்களின் வழியாகவே எனக்குச் செழியனின் நட்புக் கிடைத்தது.

ஒரு சமூக சிந்தனையாளனாக, அவை தொடர்பான ஒரு படைப்பாளியாகவே நாங்கள் அறிமுகமானோம். அந்த அறிமுகப் பழக்கங்களின் வழியே அந்தப் படைப்பாளனுக்குள் உன்னதமானதொரு மனிதன் இருப்பதை நான் கண்டுகொண்டேன். காலவோட்டத்தில் அந்தப் படைப்பாளனை விடவும் அவனுள் இருக்கும் மனிதனையே நான் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தேன்.

அதனூடாகவே பிறருக்கு எளிதில் தெரிந்திராத செழியனின் மற்றும் சில பக்கங்களை என்னால் வாசிக்க முடிந்தது.

ஏறக்குறைய 4 ஆண்டுகள் Sunny brook மருத்துவமனையில் இருவரும் ஒன்றாகவே பணியாளர்களாகப் பணியாற்றினோம். நாம் மிக நெருக்கமாக உறவாடிய காலங்கள் அவை. பெரும்பாலும் ஒன்றாகவே சென்று திரும்புவோம். செழியனின் பணியில் நேர்த்தியும் ஒழுக்கமும் இருக்கும். எளிதில் எவரும் குறை கண்டுபிடிக்க முடியாது.

ஒரு முகாமைத்துவத்துக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர் அந்த மேலாண்மையுடன் மோதும் சூழல்கள் அடிக்கடி ஏற்படும். அவ்வாறு நியாயம் கேட்க முற்படுவோர் குறை கொண்டவர்களாக இருக்க முடியாது.

தனக்கு மட்டுமல்ல, அங்கு பணியாற்றும் எவருக்காவது முகாமைத்துவத்தால் இடர் ஏற்படுகின்றபோது நியாயத்துக்காக முதலில் ஒலிக்கும் குரல் செழியனுடையதாகத்தான் இருக்கும். இவ்வாறான வேளை-களில் செழியன் ஒரு தனிமனிதத் தொழிற்சங்கமாகவே இயங்குவார். நிறுவனப் பணியாளர் பலருக்கும் தொழிலாளர் சட்ட விதிகளைக் கூறி, நியாயத்துக்காகப் போராடும் வழிகளையும் காட்டுபவராக செழியன் இருந்தார்.

எனக்கும் அங்கே சிக்கல் ஏற்பட்டது. வழக்கம் போல் முகாமைத்துவம் தன்னைப் பேணிக்கொள்ளவே முயன்றது. பாதிக்கப்பட்டவர்கள் தாமாகவே பின்வாங்கும் வரை இழுத்தடிப்பது பொதுவாக எல்லா முகாமைத்துவங்களுக்கும் இயல்பு. என்னையும் அவ்வாறே அணுகினார்கள். என் பலமாகவும் வளமாகவும் இருந்தவர் செழியனே. சட்டத்தின் உச்சம் வரைக்கும் எனக்காகப் போராடினார். எனக்கான முழுமையான நீதி கிடைக்கும் வரைக்கும் செழியன் ஓயவில்லை. இதுதான் செழியன்.

இளவயதிலிருந்தே அதிகாரத்தின் அடக்குமுறைகளுக்கு அடங்காதவராகவும் அதற்கு எதிராகக் குரல் கொடுப்பவராகவுமே தன்னை வளர்த்துக் கொண்டவர் செழியன். நலிந்தவரை நசுக்கும் அதிகாரத்தின் பிடிளைக் காணும் போதெல்லாம் செழியன் வீரியம் கொள்வதை நான் பார்த்திருக்கின்றேன்.

நானும் செழியனும் மனம்விட்டுப் பேசியதைப் போல் பிறரால் பேசியிருக்க முடியுமா? என்பது எனக்குச் சந்தேகமே. பெரும்பாலும் அகம் புறம் சார்ந்த எல்லா விடயங்களையும் நாங்கள் பேசியிருக்கின்றோம். நினைவுக்கு நிறைவு தரும் விடயங்களைப் போலவே, நெஞ்சத்தை வாட்டும் துயரங்களையும் நாம் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். நான் பேசுகின்றவேளை எம் மனவோட்டத்தைப் புரிந்துகொள்ளும் செழியன் என் உணர்வோடு கலக்கும் வகையிலே இயல்பு மாறாமல் சொற்களை மருந்தெனப் பயன்படுத்திப் பேசுவார். அந்தச் சொற்கள் மயிலிறகால் மனதை வருடும் வார்த்தைகளாக இருக்கும். என் மகிழ்ச்சியைக் காயப்படுத்தாமல் பேசவும் என் துயரங்களைத் தொட்டுத் துடைக்கும் வார்த்தைகளை வாரியிறைப்பவராகவும் இருந்தார். நான் பலரிடத்தும் கோபக்காரன் எனப் பெயர் பெற்றவன். சட்டெனக் கோபத்தையும் அதன் வழியே சுடுசொற்களையும் வெளிப்படுத்தும் இயல்பு எனக்கிருந்தது. இதனாலேயே எனக்கு வேண்டாதவர் ஆகியோர் பலர் இருந்தனர். இதை ஏற்றும் அனுசரித்தும் நட்பைப் பேணிய சிலரில் செழியன் முதன்மையானவர். அவருடைய அன்புரைகளுக்கு நான் செவி கொடுத்ததைப் போலவே, என்னுடைய அதட்டல்களுக்கும் செழியன் அடங்கியவராகவே இருப்பார். இந்த மகத்தான மனிதம் ஒரு சிலருக்கு மட்டுமே வாய்க்கும். செழியனுக்கு வாய்த்திருந்தது.

நானறிந்து வார்த்தைகளுக்குக் கூட வலிக்காமல் பேசவல்லவர் செழியன் மட்டுமே. அதேவேளை எதிரில் இருப்பவரின் வயிறு வலிக்கப் பேச வல்லவரும் இவரே. பிறரோடு உரையாடுவது எப்படி என்ற கலையை நன்கறிந்தவராக இருந்தார்.

நான் தாய்வீடு இதழைப் பொறுப்பேற்ற போது எதிர்கொண்ட சவால்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவ்வேளை என்னைப் பார்த்து இகழ்ந்தவர்களும் ஏளனம் செய்தவர்களும் இருந்தார்கள். தோள் கொடுத்துத் துணை நின்றவர்கள் சிலரே. அவர்களில் செழியனையும் சுந்தரையும் லெம்பட் அண்ணரையும் நான் என்றும் மறக்க முடியாது.

இதழ் என்பது எழுத்துகளால் நிறைந்தது. அவை தரமும் பயனும் கொண்ட எழுத்துகளாக இருக்க வேண்டும். கட்டுரைகள் பலவற்றை நான் சேகரித்தாலும் இதழை வளமாக்கவல்ல புதிய படைப்புகள் எனக்கு மாதம்தோறும் தேவைப்பட்டன. அந்தப் பக்கத்தில் எவ்வித பயனையும் எதிர்பாராமல் எனக்கு உதவியவர் செழியன். தமிழுலகு அறிந்த ஒரு படைப்பாளன். தமிழுக்கெனத் தரமான நாடகப் பிரதிகளை எழுதிக்கொண்டிருப்பவர். எனினும் நட்பின் உன்னதம் உணர்ந்து, ஊர் உலகம் அறியாத மறு பெயர்களில் தாய்வீடு இதழில் கட்டுரைகள் எழுதினார். எழுத்தாளர் என அங்கீகாரம் பெற்ற பலரும் எழுதுவதற்கு விலை வைத்துக்கொண்டிருந்த வேளை அது. சத்தம் சந்தடி இல்லாமல் ‘சிவா சுப்ரா’, ‘சிவகுமாரன்’ என்ற பெயர்களில் செழியன் எழுதிய கட்டுரைகள் ஏராளம். இக்கட்டுரைகள் பலவும் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின. இவைகள் பெரும்பாலும் இலக்கியத்தோடு தொடர்பற்று, மருத்துவம், இயற்கை, வாழ்வியல், சட்டங்கள் எனப் பல வடிவங்களைப் பெற்றிருந்தன. சமூகச் சிந்தனையாளன் என அடையாளம் காணப்பட்ட செழியன் அனைத்துப் பரப்புகளிலும் எழுதவல்ல ஆளுமையைக் கொண்டிருந்தமை என்னை வியப்பில் ஆழ்த்தியது.

செழியன் நல்ல நண்பனாக மட்டுமல்ல, நல்ல குடும்பத் தலைவனாகவும் திகழ்ந்தார். தன்னுடைய பொறுப்புகளை உணர்ந்தவராகவும் அதை முன்னிட்டு முடிந்த வரை பொருளீட்டியவராகவும் இருந்தார். என்னுடனான அவருடைய உரையாடல்களில் குடும்பம் சார்ந்த ஈடுபாட்டினை எப்போதும் வெளிப்படுத்துவார். மனைவி, குழந்தைகள் மீது தீராக் காதல் கொண்டவர் செழியன்.

இவையெல்லாம் பலருக்கும் தெரியாத விடயங்கள். எனக்கும் செழியனுக்கும் வேறு சிலருக்கும் மட்டுமே தெரிந்த செய்திகள். இவற்றைப் பகிர்ந்துகொள்ள இதைவிடச் சிறந்த தருணம் வேறு வாய்க்கப் போவதில்லை.

என்னுடைய நட்புணர்வின் பெரும்பரப்பை வெற்றிடமாக்கியிருக்கின்றது செழியனின் பிரிவு. அவர் நோயுற்றிருந்த போதும் எம்மோடிருக்கின்றார் என்ற உணர்வே எம்மை ஆசுவாசப்படுத்தியிருந்தது. ஓர் அகாலப் பொழுதில் அவர் எம்மை விட்டகன்றமை இன்றும் மனம் ஒப்ப மறுக்கின்றது.

பேனாவை தன்னுடைய ஆறாம் விரலாகக் கொண்டிருந்த செழியன் உணர்வனைத்தையும் அன்பால் நிறைத்திருந்தார். அவர் பிறரை நோக்கும் போதும் பேசும் போதும் அவரிடமிருந்து அன்பே வழிந்தது.

மானுடத்தை மனதார நேசித்த மானுடப் பிறவி செழியன். தன் எழுத்துகள் வாயிலாக அழியாப் பிறவி கொண்டிருக்கும் செழியன், உயர்ந்த நட்பின் வழியாக என் போன்ற பலருடைய நெஞ்சத்திலும் வாழ்ந்து கொண்டிருப்பார்.

■ ■ ■

# சிவகுமாரனுக்கு எனது கண்ணீர் அஞ்சலி

- மீனா தவரட்ணம் -

உமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியரின் இறுதி யாத்திரையில் பங்குகொண்டு பாராட்டிப் பேசி வழி அனுப்பி வைக்க வேண்டிய நிலைக்கு மாறாக, வயதில் குறைந்த என் அருமை மாணவனின் இறுதில் நிகழ்வில் பங்கு கொண்டு, அவன் பெருமைகளைப் பேசியபின், அதை எழுதியும் பதிவு செய்யும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு அடியேன் உட்படுத்தப்பட்ட பரிதாப நிலையை எண்ணி உள்ளம் கலங்கிக் கண்ணீர் சிந்துகிறேன்.

சிவா! உனது பெருமைகளையும் ஆற்றல்களையும், மனித நேய சிந்தனைளையும் நாட்டுப் பற்றையும் அழகு தமிழில் உன் போன்று எழுதில் வடிக்கக் கூடிய ஆற்றல் எனக்கில்லை. நீர் நோய்வாய்ப்பட்டு மிக ஆபத்தான நிலையில் இருப்பதைக் கேள்விப்பட்டு உம்மை வந்து நேரில் பார்க்க முயற்சித்த போது. உமது பரிதாப முடிவு கேள்விப்பட்டுப் பதறி மனங்கலங்கிலேன். உமது இறுதிப் பயணத்திலாவது சமூகமளித்து என அனுதாபத்தையும் மரியாதையையும் செலுத்த ஓடோடி வந்தேன். நீர் உள்ளம் கவர்ந்த அபிமானிகளால் மண்டபம் நிரம்பி வழிந்து இருந்த காட்சி கண்டு அதிர்ந்து பேனேன்.

அங்கு நீர் கெம்பீரமாக கோலம் கொண்டு படுத்திருந்த காட்சி கண்டு வாய்விட்டு உள்ளம் உருகி பதறி அழுதேன். என்னை அந்த தருணத்தில் சில வார்த்தைகள் பேசும்படி பலரால் நிற்பந்திக்கப்பட்டேன். உன்னைப் பார்த்து நான் அழத்தான் வந்தேனே ஒளிய பேச ஆயத்தமாக வரவில்லை. ஏதோ அந்த நேரம் என் உள்ளத்தில் தோன்றியதை உருக்கமாக பேசினேன். ஒரு கல்வி கற்பித்த ஆசிரியருக்கு மாணவன் கை மாறாகவும் நன்றிக்கடனாகவும் செலுத்தக் கூடியது அவன் நடத்தையும் உள்ளப் பண்பாடும் செயற்திறனுமேயாகும்.

அந்த முறையில் உமது எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் மனிதநேயச் செயற்பாடுகளாலும் என்னைப் பெருமை அடையவைத்தீர். நீர் எழுதி வெளியிட்டு குடி 'குடிக்கின்ற கோப்பையில் விஷம்' என்ற நூலை என் பெயருக்கு அற்பணித்தமை எனக்கு மிகப் பெருமையையும் மகிழ்ச்சியையும் தந்தது.

வானொலிகளில் உம்மையெல்லாம் சிறப்புப் பேட்டிகள் கண்டபோது என்னுடன் கூட இருந்து பார்த்து ரசித்தவர்களிடம் "இவன் என் மாணவன்" என்று கூறிப் பெருமைப்பட்டேன். உமது வாழ்க்கைத் துணைவியை நீர் அன்போடு அரவணைத்து வாழ்ந்து 3 (பொன்) பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்து, அவர்களையும் பண்பாக வளர்த்து உயர் கல்விபெற, புகழ் பெற்ற Waterloo பல்கலைக்கழகத்தில், கல்விகற்க வாய்ப்பளித்து அவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் வழி செய்துள்ளீர். நீர் உமது குடும்பக் கடமைகளையும் பொதுத்தொண்டுடன் சரியாக நிறைவேற்றியிருப்பது பாராட்டுக்குரியது.

ஆனால், உமது உடல் நிலை இந்த இளம் வயதிலேயே இவ்வளவு பாதகமான நிலைக்குத் தள்ளப்பட்டது மன அழுத்தமும், நம் நாட்டு மக்களின் அவல நிலையும், அவர்களுக்கு அளிக்கப்படும் அநீதியுமே என்பது யாவரும் அறிந்ததே.

நாட்டை விட்டு வெளியேறியபோதும் அந்தத் தேசிய உணர்வும் சிந்தனைகளும் செயற்பாடுகளும் உமது மனதைவிட்டு அகலவில்லை, அதைப் பற்றியே சதா சிந்திப்பதும், எழுதுவதும், பேசுவதும், செயற்படுவதுமாக உமது வாழ்நாளை அற்பணித்தீர்.

உமது அன்புத்தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், ஊர் மக்கள், ஏன் முழுச்சமுதாயமுமே உமது ஈடு செய்ய முடியாத இழப்பால் கலங்கி நிற்கின்றனர்.

நீர் உழைத்தது போதும் என்று ஆண்டவன் தன் திருவடித்தாமரையில் உம்மை அரவணைத்து ஆறுதல் தந்துள்ளார். உமது ஆத்மா சாந்திபெற்று அமைதியும் ஆறுதலும் அடையவேண்டி மனதாரப் பிராத்திக்கிறோம்.



meena.t@thaiveedu.com

# அன்புள்ள செழியன்!

- செல்வம் அருளானந்தம் -

'தண்ணீருக்குள்ளால் நெருப்பை எப்படிக் கொண்டு செல்வது?'

'கண்ணீர்வராமல் எப்படிச் சிரிப்பது?'

தோழமை என்பது ஒரு சொல்லல்ல...
அது அன்பின் வழியல்லவோ!

இவற்றை வாழ்ந்து காட்டிய 'அன்புள்ள செழியன்' என் ஆருயிர் நண்பன்.

பனி குவிந்திருந்த ஒரு மாலைப்பொழுதில் மொன்றியல் 'தமிழர் ஒளி' அலுவலகத்தின் முற்றத்தில் முதலில் சந்தித்த 1987ம் ஆண்டு குளிர்காலம் இன்று நினைவில் உள்ளது.

அதன்பின், நீண்டு நெடுத்த ஆண்டுகளின் வழியே பலவிடயங்களில் ஒன்றாக அலைந்தோம்.

அவன் அரசியலில் இயங்கி இருக்கின்றான். கவிதைகள் எழுதினான். நாடகம் எழுதினான். கதைகள், கட்டுரைகள் படைத்திருக்கின்றான்.

இவை எல்லாவற்றுக்கூடாகவும் இவன் சொன்ன விடயம் அன்பு. அன்பும் செழியனும் வெவ்வேறு என்று சொல்லமாட்டார்கள் அவனை அறிந்தவர்கள்.

'மண்ணோர் மொழிகளிலும் விண்ணோர் மொழிகளிலும் நான் பேசினும் அன்பு எனக்கு இல்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் ஆவேன் நான்' என்ற வேதவாக்கை இவன் அறிந்தானோ தெரியாது. ஆனால் வாழ்வின் நோக்கம் அன்பு செய்தலே என வாழ்ந்தவன்.

இந்த கடுமையான புலம்பெயர் அரசியல் இலக்கியச் சூழலில் இயங்கியவன் ஒரு சுடுசொல் கூறியதாக, ஒரு கடுமையான தூசணம் சொல்லியதாக, ஒரு வன்மம் பார்வை பார்த்து, யாரையும் எடுத்தெறிந்து கதைத்ததாக நான் அறியேன்.

செழியன் எத்தனை தளங்களில் இயங்கினாலும் அடிப்படையில் பிறர் ஈனநிலை கண்டு துள்ளும் ஒரு கலைஞன் - கவிஞன் - இலக்கியக்காரன், தன் தேசத்தையும் மக்களையும் தன் உளமார நேசித்தவன்.

ஒரு வகையில் பார்க்கின்றபோது மகாபாரத, இராமாயணக் கதாநாயகர்களை விட சற்று அதிகமான தண்டனை தான். அயோத்திக்கு செல்வதற்கான எல்லா வாசல்களும் நம்பிக்கைகளும் அடைபட்டு போனபின் இராவணன் ஆகிவிடுவோமோ என்ற அச்சம் முன் எப்போதும் இல்லாத வகையில் எழுந்து கொண்டேயிருக்கிறது. சீதைகளைப் பார்க்கின்றபோதெல்லாம் கண்ணீர் வருகிறது. இராமர்களுடைய சிறையில் அல்லவா இருக்கிறார்கள், இராமனாகவும் இராவணனாகவும் இல்லாமல் மனிதனாக இருக்க முடிகிறது என்றால் அது கவிதைகளோடு வாழ்வது தான்.' எனத் தன் ஒரு கவிதைப் புத்தக முன்னுரையில் எழுதுகின்றான்.



பிரான்ஸ் தமிழ் முரசு பத்திரிகையால் இவர் பெயர் அறிமுகமான போது அதன் ஆசிரியர் 'ஒரு கையில் துப்பாக்கியும் மறு கையில் பேனாவும் கொண்ட எங்கள் தோழர் செழியன்' என்றார். நேரில் அவரை கேட்ட போது தான் துப்பாக்கியை தொட்டதில்லையென்று கூறினார். பேனாவைத் தவிர வேறெதுவும் அறியேன் என்றார்.

பேச்சாலும் எழுத்தாலும் நடாகத்தாலும் கவிதையாலும் இந்த உலகத்தை மாற்றலாம். இந்த உலகம் இயல்பில் துன்பமயமானது அல்ல, நாங்கள் கொஞ்சம் முயற்சித்தால் துயர் கொண்ட இப்பூமிப் பந்தை இன்பமயமாக்கலாம்.

'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக்கெல்லாம் உய் வண்ணம் அன்றி மற்றோர் துயர் வண்ணம் உறுவதுண்டோ' என்று கூறிய கம்பன் போல் நம்பியவன் கவிஞன்.

தன் குடும்பம் மீதும் நண்பர்கள் மீதும் பெரும் பாசமும் வாழ்வின் மீது தீராக் காதலும் கொண்டவன். இங்கு இவன் வீட்டுக்குச் சென்று இவரும் மனைவி துளசியும் அன்போடு பரிமாறிய விருந்தை அருந்தாத நண்பர்கள் இல்லையெனலாம். 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி' என வாழ்ந்த இணையர்கள் இவர்கள்.

ஆனால், விதி வழி மறித்து நின்றது. பிடர் பிடித்து உந்த நின்றது. என தன் வாழ்வையும் அது தொடும் மரணத்தையும் அறிந்தவன் செழியன்.

*'பக்கங்கள் எதுவுமற்ற*
*புத்தகங்களில் காற்றின் தடயம்,*
*தடயத்தின் மீது வலி.*
*இறந்துவிடுவேன் என்று*
*நிச்சயமாகத் தெரிந்தது.*
*வாழவேண்டும் என்று துரத்துகின்ற*
*ஆசையை பிடுங்கி எறிய முடியாமல்*
*மனம் அழுகின்ற கடலுக்குள் புதைகின்றது'*

என தன் கவிதையில் எழுதுகின்றான்.

ஈழமாணவர் அமைப்பில் சேர்ந்து கிராமிய உழைப்பாளர் சங்கத்தில் அங்கத்தவராகி நிலவுடமைக்கும் சாதி சாக்கடைக்கும் எதிராகப் போரிட்டு, வீட்டை விட்டு வெளியேறியோடி, தமிழ்தேசியப்போராட்டம் முளைவிட்டபோது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் தோழராகி, பின் கனடா வந்தபோது, தேடகம் ஆரம்பித்த அங்கத்தவர்களில் ஒருவரானான்.

காலம் சஞ்சிகையின் ஆசிரியர்களுள் ஒருவரானார். மனவெளி நாடக அமைப்பில் நாடகங்கள் படைக்கும் நாடகக்கலைஞரானான். உலகத்தமிழோசை இதழின் ஆசிரியராகவும் இருந்தான். வாழ்வே எழுத்து எனக் கொண்டவன்.

இந்த சின்ன வாழ்வில் விபரம் தெரிந்த நாள்முதல் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தவன். சமத்துவ, சமதர்மக் கொள்கையை உளமார ஏற்றுக்கொண்டு அதற்கு உண்மையாகத் தன் வாழ்வை அமைத்துக் கொண்டவன். சொல்லும் செயலும் ஒன்றாகக் கொண்டு வாழ முயற்சித்தவன்.

இவனுடைய நாற்பது வருட பொதுவாழ்வை எழுதுவதற்கும் முப்பது வருடங்கள் என்னுடன் இருந்த ஆழ்ந்த நட்பைச் சொல்வதற்கும் பக்கங்கள் பல வேண்டும்.

என்னுடன் காலம் சஞ்சிகை ஆரம்பித்தவர்களான செழியன், குமார் மூர்த்தி, ஆனந்தப்பிரசாத் என்ற நண்பர்களில் செழியன் என் ஆத்மபலம். காலம் சஞ்சிகை வரத் தொடங்கிய கொஞ்ச நாளிலேயே நண்பர் குமார் மூர்த்தியை இழந்தோம். அந்தச்சாவு வீட்டில் செழியின் பேசியது இன்னும் என் நினைவில் உள்ளது.

மலைகளின் உயரத்திக்கு செல்ல வேண்டியிருக்கிறது நண்பர்களை தேடி, அவர்களை இழக்கின்ற போது மலைகளையே சுமக்கவேண்டியிருக்கிறது.

அதையே செழியன் உனக்கு கண்ணீரோடு சொல்கின்றேன், அன்புள்ள செழியன்! உன்னை நான் சுமக்கின்றேன்.



selvam.a@thaiveedu.com

# நாடகர் செழியன்

- துஷி ஞானப்பிரகாசம் -


எனக்குச் செழியனும் செழியனுக்கு நானும் முறையாக அறிமுகம் செய்துவைக்கப்பட்டது 2003ம் ஆண்டின் ஆரம்பத்தில். அந்த ஆண்டு மேடையேறிய மனவெளி கலையாற்றுக் குழுவின் பத்தாவது அரங்காடலுக்காக செழியனின் 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' என்ற நாடகத்தை சுகந்தனும் கே.எஸ். பாலசந்திரனின் 'தள்ளுவண்டிக்காரர்கள்' என்ற நாடகத்தை நானும் நெறியாள்கை செய்வதிலே ஈடுபட்டிருந்தோம். எங்கள் இருவருக்குமே இது நெறியாளர்களாக முதல் முயற்சி. அந்த மேடையேற்றம் பற்றிய சந்திப்பொன்றின் போதுதான் சுகந்தன் எனக்கு செழியனை 'செழியனைத் தெரியும்தானே?' என்ற கேள்வியோடு அறிமுகம் செய்துவைத்தார். நான் 'எனக்கு அவரைத் தெரியும் அவருக்கு என்னைத் தெரியுமா தெரியாது' என்றதும் புன்னகைத்து 'எப்பிடி இருக்கிறீங்கள் துஷி' என்று கேட்டு தனக்கு என்னைத் தெரியும் என்று தெரிய வைத்தார்.

செழியனை நான் அதற்கு ஒரு வருடத்திற்கு முன்னரே நேரில் கண்டிருக்கிறேன். ஆனால் எங்களை அறிமுகம் செய்துவைக்க வேண்டும் என்று அப்போது யாருக்கும் தோன்றவில்லை. 2002ல் ஒன்பதாவது அரங்காடலிலே 'புதியதொரு வீடு' நாடகத்திலே நான் நடித்துக்கொண்டிருந்தபோது ஒத்திகைகளுக்கு அவ்வப்போது வருவார். அவரது 'மரணம்' போன்ற போராட்ட கவிதைகளை படித்திருந்ததால் ஒரு போர்க்குணம் மிக்க மனிதராய் இருப்பார் என நான் உருவகித்து வைத்திருந்தவரை நேரில் பார்த்தபோது சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. கிறீஸ்தவராய் இருந்திருந்தால் பாதிரியாராய் இருந்திருப்பார் என்று சொல்லத்தகுந்த சாந்தமான தோற்றத்தை மட்டுமல்ல, மிக அமைதியான இயல்பையும் மென்மையான குரலையுங்கூடக் கொண்டிருந்தார். 'மழை பெய்த நாள்', 'நீ' போன்ற அவரின் 'காதல்'கவிதைகளை நான் அப்போது படித்திருக்கவில்லை.

கவிஞர் செழியன் அரங்காடலுக்குள் நுழைந்தது 1996ல் முதலாவது அரங்காடலில் மேடையேறிய குறும்பா நிகழ்வில் ஒரு நடிகனாக. அதன் பின்னர்தான் நவீன தமிழ்நாடகப்பரப்பிலே தமிழை மூலமொழியாகக்கொண்ட நாடகப்பிரதிகளுக்கிருந்த குறைபாட்டை உணர்ந்து நண்பர்களின் தூண்டுதலுடன் நாடகப்பிரதியொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அவரின் முதலாவது நாடகமான 'பெருங்கதையாடல்' 2000ம் ஆண்டு ஏழாவது அரங்காடலிலே மேடையேறியது. முதல் நாடகமே நாடகத்தின் கரு பற்றிய பலமான கருத்தாடல்களுக்கு வித்திட்டதோடு செழியனை ஒரு ஆளுமைமிக்க நாடகாசிரியராகவும் அடையாளம் காட்டியது.

"முதல் நாடகத்திலேயே செழியன் எனது கவனத்தைக் கவர்ந்ததற்கான காரணம், அதில் அவர் கையாண்டிருந்த விடயம். Pseudo-intellectuals என்று இனம் காணப்படும் போலிப் புத்திஜீவிகளைப்பற்றியும் அவர்களால் ஒரு சமூகத்திற்கு ஏற்படக்கூடிய குறிப்பாக, அதன் கலை இலக்கியத் துறைகளில் ஏற்படக்கூடிய பின்னடைவு பற்றியதுமான எனது நீண்டநாள்க் கருத்தை ஒத்ததாக அந்த நாடகத்தின் கரு அமைந்திருந்தது. செழியனின் நையாண்டிகலந்த கூர்மையான அவதானம் அதில் பிரதிபலித்தது" என்று கூறுகிறார் நாடகரும் தமிழ் ஒலி-ஒளி பரப்புத்துறை முன்னோடிகளில் ஒருவருமான பி. விக்னேஸ்வரன். இன்றும் நாடக நண்பர்கள் கூடுமிடங்களிலெல்லாம் அந்த நாடகம் பற்றிய பேச்சும் வந்துபோகும். அந்த நாடகத்திலே ஒரு பாத்திரமேற்று நடித்திருந்த சுகந்தன் "நான் பல நாடகங்களில் நடித்திருக்கிறேன். ஆனால், பெருங்கதையாடல் நாடகம் ஒரு தனி அனுபவம். அந்த நாடகத்தில் நடிக்கக் கிடைத்ததையிட்டு நான் அடிக்கடி பெருமைப்படுவதுண்டு. செழியனின் உறுதியான சமூகப் பிரக்ஞையும், போலிகளை விமர்சிக்கும் போர்க்குணமும் பெருங்கதையாடலில் தெளிவாக வெளிவந்தது" என்று கூறுகிறார்.

அதையடுத்து, 2001லே எட்டாவது அரங்காடலில் 'வேருக்குள் பெய்யும் மழை' புராந்தகனின் நெறியாள்கையில் மேடையேறி மீண்டும் செழியனை சிறந்ததொரு நாடக ஆசிரியனாக அடையாளங்காட்டியது. ஆனால் நான் முதலிலே பார்த்த அவரின் நாடகம், 2003லே பத்தாவது அரங்காடலிலே சுகந்தனின் நெறியாள்கையில் மேடையேறிய 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது'. அந்த நாடகத்தின் உயர் செழுமை மிக்க நாடகமொழி மட்டுமல்ல அது பேசிய விடயமும் என்னை மிகவும் கவர்ந்தது. அந்தக் காலகட்டத்தில் புலம்பெயர்ந்த நாட்டிலே இனக்காழ்ப்பால் பாதிக்கப்படுபவர்களாக மட்டுமே எம்மைநாம் பார்த்து வந்த சூழலிலே, எமக்குள் ஆழவேரூன்றியிருந்த இனக்காழ்ப்பு பற்றி அங்கதத்துடனும் அதேவேளை பார்வையாளர்களுக்கு உறைக்கும் விதத்திலும் கூறிய அந்த நாடகம் செழியனின் சமூக அக்கறைக்குச் சான்று.



"செழியனின் நாடகங்கள் எல்லாவற்றிலுமே அங்கதச்சுவை இழையோடுவதைக் காண முடியும். அது அவரின் இயல்பான நகைச் சுவை உணர்வின் வெளிப்பாடுங்கூட. மேலும், ஒரு நுண்ணிய உணர்வை அல்லது விடயத்தை ஆதாரமாக வைத்தே அவரின் நாடகங்கள் கட்டமைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். அதிலிருந்தே அது தொடர்பான பல்வேறு விடயங்களையும் செழியனின் நாடகங்கள் அலசிச்செல்லும். இன்னொரு விடயம் அவரின் கவித்துவம். நாடகங்களின் தலைப்புகள் மட்டுமல்ல பலவேளைகளில் பாத்திரங்களின் வசனங்கள்கூட கவிதைவரிகள்போல அமைந்திருப்பதை செழியனின் நாடகங்களிலே காணமுடியும்" என்று கூறுகிறார் அவரின் நாடகங்களில் பெரும்பாலானவற்றை நெறியாள்கை செய்த அ. புராந்தகன்.

இதையடுத்து செழியன் மீண்டும் அரங்காடலுக்காகவென்று எழுதிய நாடகம் 'தீர்ப்பிட்ட விரலே'. இந்த நாடகத்திலே நானும் நடிப்பதாய் இருந்து சில மாதங்கள் ஒத்திகையும் செய்திருந்தோம். 2008லே மேடையேறுவதாக இருந்த அந்த நாடகம் ஈழத்தின் போர்ச்சூழல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு பின்னர் மேடையேற வேயில்லை. செழியனின் மறைவையொட்டி மனவெளி கலையாற்றுக் குழு வெளியிட்ட இரங்கல் செய்தியிலே '2008ல் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்ட அந்த நாடகத்தின் பேசுபொருளான பல விஷயங்கள் அச்சொட்டாக ஈழத் தமிழினத்துக்கு அடுத்த ஆண்டில் யதார்த்தமாகவே ஏற்பட்டிருந்தது. இது செழியனின் தீர்க்கதரிசனத்திற்கு நல்லதொரு சான்று. 2009 நிகழ்வுகளுக்குப் பிறகு இந்த நாடகத்தை மேடையேற்றுவது உசிதமும் பொருத்தமும் அற்றதாக இருந்த காரணத்தாலேயே இந்த நாடகத்தை பின்னர் தவிர்த்தோம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

செழியனின் ஒவ்வொரு நாடகமும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றுமுழுதாக வேறுபட்டிருக்கும். இதற்குச் சான்றாக 2012லே பதினைந்தாவது அரங்காடலிலே மேடையேறிய 'சவரக்குறிப்புகள்' 'பூச்சியப்பெருவெளி' ஆகிய அவரின் நாடகங்களைக் குறிப்பிடலாம். இரண்டு நாடகங்களையும் ஒரே மேடையிலே அரங்கேற்றும் அளவுக்கு ஒன்றிலிருந்து ஒன்று பேசுபொருளிலும், நாடக மொழியிலும், ஆற்றுகை முறையிலும் முற்றிலும் வேறுபட்டிருந்தது. அதிலே 'சவரக் குறிப்புகள்' நாடகத்தை நெறியாள்கை செய்த புராந்தகன் "அதற்கு ஒரு காரணம், நாடகத்திற்கான அளிக்கை வடிவத்தை முடிவு செய்வதிலே செழியன் எந்தவித ஈகோவும் இல்லாமல் நெறியாளரின் கருத்துக்களையும் உள்வாங்கி நாடகப் பிரதியை உருவாக்கக்கூடியவர்" என்று கூறுகிறார். 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' நாடகத்தை நெறியாள்கை செய்த சுகந்தனும் அந்தக் கருத்தோடு உடன்பட்டு "நாடக இயக்குனர்களுக்கு பூரண சுதந்திரத்தைக் கொடுத்து, திறந்த மனதோடு கருத்துக்களையும், பரிந்துரைகளையும், விமர்சனங்களையும் உள்வாங்கி, இயக்குனர்களுடன் சேர்ந்து கலந்தாலோசித்து, தேவையான மாற்றங்களைச் செய்து நாடகத்தை ஒரு சிறந்த படைப்பாக வெளிக்கொண்டுவரும் ஆளுமையும், மனப் பக்குவமும் கொண்ட ஒரு நாடக எழுத்தாளர் செழியன்" என்று கூறுகிறார்.


'பூச்சியப் பெருவெளி' நாடகத்தை நான் நெறியாள்கை செய்வதென்று முடிவானபோது புராந்தகனும் சுகந்தனும் கூறுகின்ற அனுபவத்தையே நானும் பெற்றேன். நாடகத்தை தான் எழுதிக்கொண்டிருந்த போதே, ஒவ்வொரு இரவும் தான் எழுதி முடித்த பகுதியை எனக்கு மின்னஞ்சலிலே அனுப்பி வைப்பார். 'படித்து விட்டு நாடகத்தின் போக்கு சரியாக இருக்கின்றதா அல்லது மாற்றங்கள் தேவையா என்று கூறுங்கள்' என்று கேட்பார். எனக்கோ அவருக்குக் கூறுவதற்கு எதுவும் இருக்காது. காரணம் வைக்கம் முகமது பஷீரின் சிறுகதையொன்றுக்கு நான் நாடக உரு கொடுப்பதற்கென்று பலகாலம்முயன்று முடியாதுபோய் சரணடைந்தபோது, 'கதை உங்களுக்குப் பிடித்திருந்தால் பிரதியை உருவாக்கித் தருமாறு செழியனைக் கேட்கலாம்' என்று மனவெளி நண்பர் செல்வன் எனக்கு வெற்றிகரமாகப் பின்வாக்குவதற்கான உத்தி கூறியதால்தான் அந்த பிரதி உருவாகவே ஆரம்பித்தது. பிரதியோ, கதையை வாசித்து விட்டு நான் கற்பனை கூட பண்ணிப் பார்க்காத அளவுக்கு நெறியாளரின் கற்பனைக்குத் தீனிபோடுவதாக அமைந்திருந்தது. நாடகத்தைப் பார்த்த கவிஞர் சேரன் 'பஷீர் வாழ்ந்த காலகட்டத்து அரசியல் வேறுவகையானது. அவரது கதையிலிருந்து சமகாலத்து நிகழ்வுகளை விமர்சிக்கின்ற ஒரு நாடகத்தை உருவாக்குவதென்பது செழியனின் கூரியபார்வையால்தான் சாத்தியப்பட்டிருக்கிறது' என்று என்னிடம் கூறியதை நான் செழியனிடம் கூறிய போது அவர் நெகிழ்ந்துபோனார். அந்த நெகிழ்ச்சி ஒரு கர்வமற்ற கலைஞனை எனக்கு இனங்காட்டியது.

செழியனுடனான எனது உறவு பலமாகி நட்பாக மலர்ந்தது 'பூச்சியப் பெருவெளி' தயாரான காலத்தில்தான். அவரின் 'வானத்தைப் பிளந்த கதை' வெளியாகியிருந்த காலம் அது. நாடகப்பிரதி பற்றிப் பேசுவதற்காக என ஏற்படுத்தப்பட்ட எமது அன்றாட உரையாடல்கள் நாடகத்தில் தொடங்கி பல்வேறு விடயங்களையும் தொட்டுச்செல்லும். தனது கடந்த கால மனவருத்தங்கள் பற்றி, எதிர்கால கனவுகள் பற்றி, பயங்கள் பற்றி, குடும்பம் பற்றி, உடல்நிலை பற்றி என அவ்வளவு பழக்கமில்லாத என்னோடு கூட மிக நெருங்கிவந்து மனந்திறந்து உரையாடிய அவரின் பண்பும் மாண்பும் என்னைக் கவர்ந்தது. அன்பால் இழைத்த இதயம் அவருடையது.

செழியனின் முதல் மூன்று நாடகங்களான 'பெருங்கதையாடல்', 'வேருக்குள் பெய்யும் மழை', 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' ஆகியவற்றைத் தொகுத்து உயிர்மை 2003ல் நூலுருவாக வெளியிட்டது. இருந்தபோதும், செழியனின் நாடகங்களை கனடாவின் கடல்களைக் கடந்து எடுத்துச் சென்றவர் நவீன தமிழ்நாடக உலகின் முன்னோடிகளில் ஒருவரான க. பாலேந்திராதான். "ஈழத்து நாடகாசிரியர்களில் மேடைக்கு ஏற்றவகையில் அரங்கை நிகழ்த்தலை மனதில் இருத்தி நாடகப்பிரதிகளை ஆக்குவதில் செழியன் வல்லவர். இப்படியான நல்ல நாடகப் பிரதிகள் ஈழத்து தமிழ் சூழலில் கிடைப்பது அரிது. ஈழத்து நாடகாசிரியர்களில் எனக்கு மிகவும் பிடித்த நாடகாசிரியர் செழியன் என்று சொல்லமுடியும்" என்று கூறும் அவர் 'வேருக்குள் பெய்யும் மழை' நாடகத்தை 2002-2004 பகுதியிலே பத்துத்தடவைகள் மேடையேற்றியபோது அது பெருவரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து 'பெருங்கதையாடல்' நாடகத்தை 2004லும், 'என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' நாடகத்தை 2011லும் இலண்டனிலே அவர் நெறியாள்கை செய்து மேடையேற்றியிருக்கிறார்.

செழியனின் நாடகம் அவர் மிகவும் அன்பு செய்த ஈழத்து மண்ணில் மேடையேறுவதற்கும் பாலேந்திராவே காரணமாக அமைந்தார். "அவருடன் பேசும் பொழுதுகளில் எமக்கு நாடகம் எழுதித் தரும்படி வேண்

தொடர்தல் 89ம் பக்கம்



# ஆளற்ற தனித் தீவில் அழியாத காலடியும் எழுதாத கவிதையும்

பின்னிரவில்
குருதிக் கிண்ணங்களுக்குள்
வாழ்வின் மதுவையும்
சாவின் அழைப்பையும்
புன்னகையோடு ஒன்றாக வார்க்கிற கவிஞனை
உங்களுக்குத் தெரிந்திருக்கும்

இல்லை.
நீங்கள் ஊகிக்கிற கவிஞன் அவன் அல்லன்.

இதுதான் இறுதி விருந்து என்பதை
ஒருவரும் சொல்லவில்லை
மதுக் கோப்பையுடன் எந்தக் கடவுளரும் நடுவில் அமரவில்லை
சலசலப்பும் இரைச்சலும் இல்லாமல்
எந்தக் கொண்டாட்டமும் இல்லை
சமையலும் மையலும் தேர்ந்த கவிஞனை
எவரும் ஏமாற்ற முடியாது
நெருப்பும் நீருமில்லாமல் அவன் ஆக்கிய ஊண்
உங்களுடைய இதயத் துடிப்பைப் போன்றது

அப்படித்தான் இருக்கும் என்பது தெரியும்
எனினும்
"எல்லா இறப்புகளும் கடந்து போகின்றன"
என்று சிறப்பறியா முகநூல் குறிப்புகளைப் போல
மறந்து போய் விடுகிறோம்.

செழி,
"அக்கறை, வரலாற்றில் இல்லை
வரலாறாவதிலும் இல்லை
வாழ்வதில்தான்"
என நீங்கள் சொல்லிய கணம் நினைவில் வர மறக்கிறது.

உயிர் தப்பி
யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சக வளாகத்துள் ஒளித்திருந்து
வெளியேறிய போதாக இருக்கலாம்.
அல்லது தொறொன்ரோவில்,
காலணிகளுக்கான அருங்காட்சியகத்தின் எதிர்ப்புறமாக
கண்ணீரும் தண்ணீரும் சேர்த்துப் பருகும்
நமது பழைய கோப்பிக் கடையிலாக இருக்கலாம்.

இருவருடைய மணிக்கட்டும் கைவிரல்களும்
அளவில் ஒன்றாக இருந்த காலம் கரைந்து விட்டது

குருதிக் குழாய்களில்
தொடர்ந்தும் மின்னல் பாய்ந்து கொண்டிருக்கிறது

அகக் காயங்களில்
எப்போதும் கனன்று கொண்டிருக்குமே தீ?
அதற்கு ஓய்வு வழங்க முடியுமா நம்மால்?

வாழ்க்கையும் காலமும் இன்று
இருளைப்போல கூர்மையானவை
உருக்குலைந்த ஈரல் போலத் தத்தளிப்பவை.

உங்களுடைய சிதையில் ஏற்றப்படும்
ஒவ்வொரு கட்டையும் ஒவ்வொரு நிறம் பெறுகிறது
என்பது எல்லோரது கனவாகவும் இருக்கட்டும்.

சேரன்

# மன நிறைவு தந்த கவிஞன்

**- வை. சொர்ணலிங்கம் -**

செழியனை நான் முதன் முதல் தெரிந்துகொண்டது மனவெளி அரங்கில் அவர் நாடகம் மேடையேறியபோதுதான். அவருடைய நாடகங்கள் அத்தனை காத்திரமாக இருக்கும். அவருடைய நாடகங்களின் தாக்கத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டபோதுதான் அறிந்தேன் அவர் கவிஞராக முதலில் அறியப்பட்டவர் என்று. அப்போது இசையரங்கம் தனது 10ஆவது மேடைக்கு யாதவனை ஒழுங்கு செய்த நேரம். செழியனிடம் பாடல்கள் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டேன். அவரும் வானில் முகிலோடும் எனும் பாடலை எனக்கு அனுப்பி வைத்தார். அதை யாதவனிடம் கொடுத்தேன். அதற்கான மெட்டை பயாஸ் போட யாதவன் பாடினார். அந்த மெட்டுக்கு சரணத்தில் ஒரு வரி இடித்தது. அவர் 'வேப்ப மரக்கிளையில் கூவும் குயில் துயர் பாடி நிற்கும்' என எழுதியிருந்தார். அவரிடம் கூப்பிட்டு சொன்னேன். அவர் மிகவும் நிதானமாக "அண்ணை உங்களுக்கேற்றமாதிரி பொருள் மாறாமை மாத்துங்கோ" என்றார். நானும் 'வேம்பின் கிளைமேல் கூவும் குயிலோ நின்று துயர் பாடும்' என மாற்றியிருந்தேன். அவரும் அதை சரியெனச் சொன்னார். அவரின் மூன்று பாடல்கள் இசையரங்க மேடையில் ஒலித்தது. அவை மூன்றும் இறுவட்டில் பதிவானது.

அவரோடு ஒரு கவிதா நிகழ்வை செய்திருந்தேன். அவரிடம் கவிதை கேட்டிருந்தேன். அவர் சிலரின் கவிதைகளை எடுத்து தனது கற்பனைகளையும் கலந்து அற்புதமான பிரதி ஒன்றை தந்தார். அதில் எனக்கு மன நிறைவு எனது வரி-



களையும் அவர் சேர்த்துக் கொண்டது தான்.

கலை இலக்கிய உலகம் இன்று ஒரு படைப்பாளியை இழந்து நிற்கிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய கலைஞர்கள் சார்பில் இறைவனை வேண்டுகின்றேன்.



sornalingam@thaiveedu.com

# நாடகர் செழியன்...

88ம் பக்கத் தொடர்ச்சி...

டியிருக்கிறேன். 'ஒன்றும் ஒன்றும்' என்ற ஒரு குறு நாடகத்தை செழியன் எனக்கு அனுப்பியிருந்தார். அதனை தயாரிக்க எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மட்டக்களப்பு பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவி ஜசோதினிக்கு அந்த நாடகப் பிரதியை செழியனின் அனுமதியுடன் அனுப்பினேன். அங்கு அந்த மாணவி இந்த நாடகத்தை சிறப் பாக பரீட்சைக்காக 2017லே மேடையேற்றியிருந்தார். இதுவே இந்த நாடகத்தின் முதல் மேடையேற்றம் ஆகும்" என்று கூறிய பாலேந்திரா "தற்போது அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வரும் மார்ச் மாதம் இலங்கையில் வவுனியா நகரில் மீண்டும் இந்த நாடகத்தை மேடையேற்ற இருக்கிறார்" என்ற தகவலையும் தெரிவித்தார்.

இந்த நாடகமே பெரும்பாலும் செழியன் எழுதிய இறுதி நாடகமாக இருக்குமென நினைக்கிறேன். "ஜசோதினிக்காக நான் தொலைபேசியில் செழியனை தொடர்பு கொண்ட பொழுது "பாலா அண்ணா நீங்கள் என்னை கேட்காமலே கொடுத்திருக்கலாம்" என்றார். அப்படியான அன்பும் மரியாதையும் பெருமனதும் அவரது பண்பு. அது தான் அவருடனான எனது இறுதி உரையாடல் என்பது எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை" என்கிறார் பாலேந்திரா.

அரங்காடலுக்காக செழியன் எழுதிய கடைசி நாடகமான 'கடலில் இருந்து கையளவு மேகம்' 2013ல் நடைபெற்ற பதினாறாவது அரங்காடலிலே க. நவம் நெறியாள்கை செய்ய மேடையேறியது. செழியனின் ஏனைய நாடகங்களைப்போலவே அதுவும் பல்வேறு நிலைப்பட்ட வாதங்களுக்கு வித்திட்டது.

'பூச்சியப் பெருவெளி' நாடகத்தின்பின் நானும் அவரும் மீண்டுமொரு நாடகத்தை இணைந்து செய்வது பற்றி காணும்போதெல்லாம் பேசுவோம். நான் அவரைக் கடைசியாகக் கண்டது ஒரு நூல் வெளியீட்டில். அப்போதும் முதற் சந்திப்பின்போது கேட்டதுபோலவே 'எப்பிடி இருக்கிறீங்கள் துஷி' என நலம் விசாரித்தார். பின்னர் "நான் உங்களுக்கு ஒரு பிரதி கடன், நீங்கள் எனக்கொரு நாடகம் கடன்" என்றார். "நீங்கள் உங்கட கடனை அடைச்சாத்தான் நான் என்ர கடனை அடைக்கலாம்" என மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பதில் சொல்வதாகக் கருதிப் பதில் சொன்னேன். இருவரும் நிரந்தரக் கடனாளிகளாகவே பிரியப்போகிறோம் என்பது இருவருக்கும் அப்போது தெரியாது.

"அவர் மனவெளிக்கு எழுதிய நாடகங்கள் செழியன் ஓர் ஆழ்ந்த புத்திசாதுரியமிக்க நாடக ஆசிரியர் என்ற உண்மையை வெளிப்படுத்தின. அவரது அனுபவம் முதிர்ச்சியடையும்போது தமிழுக்கு மிகக் காத்திரமான நாடகங்களைத் தரக்கூடியவர் என்று நம்பியிருந்தேன்." என்று பி. விக்னேஸ்வரன் கூறுகிறார்.

நானும் நம்பியிருந்தேன்!



dushy.gnanapragasam@thaiveedu.com

# அனுபவம் பகிர்வு

- அதீதா -

2002ம் ஆண்டில் எனக்கு அறிமுகமானார் செழியன். இலக்கிய உலகில் ஈழத்தில் முக்கிய கவிஞராகவும் தாயக விடுதலைப் போராளியாகவும் எழுத்தாளராகவும். நாடக எழுத்தாளர், நடிகர் எனப் பல துறைகளிலும் ஆளுமையாக இருந்த படைப்பாளி. செயற்பட்டவர். எங்களுக்கு அறியப்பட்டவர்.

அண்மையில் கனடாவில் சுகவீனம் காரணமாக இறந்துவிட்டார். செழியனது இழப்பு எங்கள் எல்லோருக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் கனடாவிலும் அரசியல் சமூக செயற்பாடுகளில் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். செயற்பட்டவர். அதற்கூடாக எங்களால் அறியப்பட்டவர்.

இனிமையாகப் பழகுவதும் நகைச்சுவை கலந்து பேசுவதும் அவரோடு தொடர்ந்தும் பழகத் தூண்டும். செழியன் எங்கள் வீட்டிற்கு கருணாவுடன் பலதடவை வந்திருக்கிறார். ஒவ்வொரு தடவை வரும்போதும் நிறைய பகிடிகளை சேர்த்துக்கொண்டு வந்து எங்களைச் சிரித்துக் களைக்க வைத்துவிட்டுச் செல்வார். சிலவேளைகளில் எங்கள் வீடு ஒரு மயான அமைதியாக அல்லது நாங்கள் சோர்வுத்தன்மையாக இருந்தால் உடனே செழியனையும் கருணாவையும் கூப்பிடுவோம், அப்போதுதான் வீடு கலகலப்பாக இருக்கும். நாங்களும் மனம்விட்டுச் சிரிக்கலாம் என முடிவெடுக்குமளவிற்கு எங்களுடன் நெருங்கிப் பழகியவர். இன்று செழியன் இல்லை என்பது ஒரு வெறுமைதான். எந்த ஒரு நிகழ்வுகளில் செழியன் நின்றாலும் அந்த இடம் ஒரே கலகலப்பாக இருக்கும். எல்லோரையும் தனது கதைகளால், பகிடிகளால் சிரிக்கவைத்து விடுவார்.

இந்த செழியன் எனும் மனிதரை ரொறன்ரோவின் இலக்கிய நிகழ்வுகளிலும் அரங்க நிகழ்வுகளிலும் அரசியல் நிகழ்வுகளிலும் நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். பலவேளைகளில் அந்த நிகழ்வுகள் கருத்து முரண்பாடுகளால் முறுகல்களுக்குள்ளாகும் போது மிகுந்த கவனத்துடனும் ஒரு சிரிப்புவரக்கூடியளவிற்கான கருத்துச் சொல்லலுடனும் அத்தனை பேரது முரண்பாடுகளையும் தணியவைத்து வேறுதிசைக்கு இட்டுச் செல்லக் கூடிய பக்குவத்தை நான் அவரிடம் பார்த்திருக்கிறேன். அவரிடம் முரண்பட்டு சண்டையிடும் நண்பர்களை மிகவும் அன்பாக எதிர்கொண்டு தன்னுடைய கருத்தை மிக நிதானமாக முன்வைக்கும் சந்தர்ப்பங்களை நான் அவதானித்திருக்கிறேன். பல நண்பர்களிடம் இல்லாத பக்குவம் அவரிடம் இருப்பதினை உணர்ந்த போது அவரிடம் அதிகம் எனக்கு நெருங்க முடிந்தது.

குடும்பச் சூழலில் வரும் நெருக்கடிகளை மனம் விட்டுப் பேசக் கூடிய ஒரு நண்பராக செழியன் இருந்தார். அவலப்பட்டுப் போயிருக்கும் தருணங்களில் “இதெல்லாம் ஒன்றுமில்லை. இதப்போல எத்தனை இன்னும் வரும். சும்மா விட்டுப்போட்டு இருங்க” என்று சுலபமாகச் சொல்லும் வார்த்தைகளை நான் செழியனிடம் இருந்து பலதடவை கேட்டிருக்கிறேன். தான் அத்தனை வலிகளையும் உள்வாங்கிக் கொண்டு நாம் அதனை இலகுவாக மறந்து விடக் கூடிய வார்த்தைகளைச் சொல்லக்கூடியவராக அவர் இருந்தார்.

நாங்கள் கனடா வந்திருந்த காலத்தில் செழியன் நாடகத்துறையில் மிகவும் பிரபலமாக இயங்கிக்கொண்டிருந்தார். அப்போது எங்கள் வீட்டிற்கு வந்து போகக் கூடியவராக இருந்தார். நாங்கள் ஒரு அறை கொண்ட ‘பேஸ்மென்ற்’ ஒன்றில் வசித்து வந்தோம். பேல நாடகப் பிரதிகள் அந்த பேஸ்மென்றில் இருந்தும் தயார் செய்யப்பட்டதினை நான் நினைவுகொள்கிறேன்.

அப்போது நாங்கள் சாதாரணமாக வாழக் கூடிய வாழ்வை விட மிகவும் கஸ்டமான சூழலில் வாழ்ந்து வந்தோம். எங்களுடைய வாழ்வைப் பார்த்து கவலை கொண்ட செழியன் மாதத் தவணையில் கட்டும் படி எமக்கு ஒரு தொலைக் காட்சி ஒன்றை வாங்கித் தந்தார். எமது குழந்தைகளுக்கும் எமக்கும் மிகப் பெரிய உதவியாக இருந்தது. “கனடாவில் நீங்கள் வாழ்வது என்றால் உங்களால் முடியாது. நமது நண்பர்கள் வைத்திருக்கின்ற ‘சோபா’ போல் வாங்குவதற்கே உங்களுக்குப் பத்து



வருடமாகும்” என்று சொன்ன பல நண்பர்கள் எம்மைச் சூழ இருந்த பொழுது, செழியன் எமக்குத் தந்த ஆறுதல்கள் கொஞ்சமல்ல. செழியனுக்கு ஒரு மானிட நேயம் இருந்தது. அவர் கடந்து வந்த பாதையோ அல்லது அவர் எதிர் கொண்ட அனுபவமோ அவர் எதையும் எதிர்கொள்ளும் விதம், மற்றவர்களுக்குச் சொல்லும் ஆலோசனை மிகப்பயனுள்ளதாக இருக்கும். அது எனக்கும் இருந்தது.

‘தட’ ‘தட’ என இப்ப ஒழுங்கையால் பலர் ஓடி வந்தனர். முதல் ஓடி வந்தவன் ஒழுங்கையில் நேராக ஓடிப்போய்க்கொண்டிருந்தான். சிலர் ஒழுங்கையின் முகப்பில் நின்று கொண்டிருந்தனர். நான் நின்று கொண்டிருந்த வீட்டின் இரும்புக் கேட்டை காலால் இடித்துத் தள்ளிக் கொண்டு துப்பாக்கியும் கையுமாய் தலை தெறிக்க ஓடிவந்த ஒருவன் வீட்டின் பின்பக்கமாக ஓடினான். அவன் முன்பக்கம் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் என்னை நிச்சயமாக கண்டிருப்பான். மறுபடியும் ஒரு முறை நான் பிழைத்தேன். பின்புறம் சென்றவன் மறுபடியும் முன்பக்கமாக வருமுன் எப்படி நான் மறைவது. நான் ஏறக்கூடியவாறு அடர்ந்த மரம் ஏதும் இருந்தால் ஏறலாம். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. வேலி ஏறிக்குதித்தால் ஒரு புறம் ஒழுங்கை. அடுத்த வேலி ஏறினால் நான் வந்த கோப்பாய் மானிப்பாய் வீதி. இரண்டு பக்கமும் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். மூன்றாவதான பின் பக்கமும் அவர்களில் ஒருவன் நிற்கிறான். நான்காவது பக்கமாக இருந்தது கேட்டிற்கு நேர் எதிர்த் திசைப் பக்கம். அதை அடைய சில நிமிடம் எடுக்கும். அதற்குள் அவன் வந்து விடுவான். அப்படியானால் என்ன அவர்களின் கையில் அகப்படுவதா? கூடாது. நான்காவது பக்கம் ஓடுவதற்கு எழுந்த கண்ணில் அது தட்டுப்பட்டது.

அந்த வீட்டின் நான்கு புறமும் கிடுகு வேலியால் ஆனது என்றும் ‘கேட்’ மட்டும் இரும்பினால் ஆனது என்றும் குறிப்பிட்டேன். அந்த இரும்புக்கேட்டை நிறுத்த கொங்கிரிட் தூண் கட்டியிருந்தார்கள். எப்போதாவது வீட்டை சுற்றியுள்ள வேலியை அகற்றிவிட்டு மதில் கட்ட வேண்டும் என்ற நோக்கம் அந்த வீட்டுக்காரர்களுக்கு நிச்சயமாய் இருந்தது. அதனால் அந்த கொங்கிரிட் தூணிலிருந்து ஒரு அடுக்கு சீமெண்டுக்கற்கள் ஆரம்பமாகி இருந்தன. அந்த சீமெண்டு கற்களுக்கும் கிடுகு வேலிக்கும் இடையில் சிறு இடைவெளி. ஒரு ஆள் நிற்கலாம் போல் தோன்றியது. அடுத்த கணமே அந்த இடைவெளிக்குள் நின்றேன். (- *‘ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து’- செழியன்*)

இந்தச் சம்பவங்களை நாட்குறிப்பாய் எழுதிய செழியன் பல தடவைகளில் இந்தச் சம்பவங்களை தனது உரையாடல்களின் இடையிடையே சொல்லக் கேட்டிருக்கிறேன். தனது போராட்ட வாழ்விலிருந்து உயிர் தப்பி வந்த செழியனுக்கு இது இரண்டாவது வாழ்வு என்றே பல நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அவரது ‘ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து.’ எனும் புத்தகத்தை வாசித்துப் பார்க்கும் போது அதனை உணர்வீர்கள்.

அவர் தனது இறுதிக் காலத்தில் தனது உடல் நிலையைப் பொருட்படுத்தாது இருந்தார். கடைசியாக நான் அவரை நண்பர் பாபுவின் அஞ்சலி நிகழ்வில் கண்டேன். உடல் சுருங்கி அடையாளம் தெரியாது வேறு யாரோ போல் இருந்தார். அப்பொழுதும் தனது நையாண்டிக்கதைகளைக் குறைத்தவர் போல் தெரியவில்லை. அவர் சுகமாகி வந்து விடுவார் என்றே எண்ணியிருந்தேன். அப்படித்தான் எனது பல நண்பர்களும் எண்ணியிருந்தார்கள். மரணம் கவலையானது. அழகான கவிதையாக அவரே சொன்னது போல்

*‘மரணத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை*
*ஒரு அநாதையாய், ஒரு அடிமையாய்*
*புதிய எஜமானர்களுக்காகத்*
*தெருக்களில் மரணிப்பதை வெறுக்கிறோம்’*

என்ற வரிகளுக்குரியதாக அவரது மறைவு நினைக்கவைத்திருந்தது.




atheetha@thaiveedu.com

# எஞ்சியிருப்பவை நினைவுகளாயினும் எழுதியே ஆகவேண்டும்!

- கருணா -

ஒஸ்தியோபோரசிஸ் (Osteoporosis) என்று ஒரு நோய் இருக்கிறது. அந்த நோய் பற்றி செழியன் ஒரு கட்டுரை எழுதினார். இந்த நோய் எலும்புகள் தேய் வதனால் ஏற்படுவது. கூனல் ஏற்படுவதற் கும் இந்த நோய் ஒரு காரணமாக இருக் கிறதாம். செழியன் தனது கட்டுரையை இவ்வாறு தொடங்கினார் 'ஔவையாருக்கு ஒஸ்தியோபோரசிஸ் இருந்திருக்க வாய்ப் பிருக்கிறது'.



செழியன் தனியே இலக்கியம் பற்றி அர சியல் பற்றி மட்டுமே எழுதியவர் அல் லர். அவர் மருத்துவம், வாழ்வியல், சமூக வியல் பற்றியெல்லாம் அரிய கட்டுரை- களைத் தாய்வீடு பத்திரிகையிலும் ஏனைய இதழ்களிலும் எழுதியிருக்கிறார். அவர் கட்டுரைகளைத் தொடங்குகிற விதமே அலாதியானதாக இருக்கும். நான் அவ ருடைய எழுத்துக்களின் ஒரு காதலன்.

நான் செழியனைச் சந்தித்தது 90களின் ஆரம்பத்தில் என்று ஞாபகம். அவரு- டைய கவிதைகளில் இருந்து நான் உருவாக்கி வைத்திருந்த செழியன் என் கிற பிம்பம் அன்று உடைந்து போனது. அவர் பார்ப்பதற்கு மிகவும் மென்மை யானவராகவும், அதிர்ந்து பேசாதவராக வும், எளிமையானவராகவும் இருந்தார். அவர் தனக்கு நெருக்கமானவர்களைத் 'தலைவன்', 'தெய்வம்' என்று அழைப்பது வழமை. என்னையும் அவ்வாறே அழைத் தார். அவர் நம்முடன் பேசும் போது அதில் ஒரு உண்மையும் பாசமும் இருந்தது. எவ்வளவு பெரிய மனிதர், இவ்வாறு சாதா ரணமானவராக இருக்கிறாரே என்று ஆச் சரியப்பட்டேன்.

அவருடைய பிரபலமான வாசகமாகப் பலராலும் கூறப்படுவது 'எஞ்சியிருப் பவை கரித்துண்டுகளாயினும் எழுதியே முடிப்போம்' என்பது. அந்த வரி எழுதப் படும்போது நான் அவருக்கு முன்னாலி ருந்தேன். தேடகம் நூலகம் எரிக்கப்பட்ட மறுநாள் என்று ஞாபகம். அந்த எரிப் பைக் கண்டித்து ஊர்வலமொன்றை நடத் துவதாக ஏற்பாடாகியிருந்தது. அதற்கான பதாதைகளை நான் தேடகத்தின் நிலவ றையில் இருந்து எழுதிக்கொண்டிருந் தேன். புத்தகங்கள் எரிந்துபோனதால் மேலே ஒரே கரிக்குவியலாக இருந்தது. செழியன் உள்ளே வந்தார். தானும் பதா தைகளை எழுதுகிறேன் என்றார். அவர் தன்னுடைய வாசகங்களையே பதாதைக- ளில் எழுதினார். அவ்வாறு எழுதப்பட்ட வரிதான் 'எஞ்சியிருப்பவை கரித்துண்டுக- ளாயினும்....".

அவருடைய பல நூல்களின் அட்டை களை வடிவமைக்கிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய 'வானத்தைப் பிளந்த கதை', 'குழந்தைகளிடம் பொய் களைக் கூறாதீர்கள்', 'குடிக்கின்ற கோப் பையில் விஷம்' போன்ற நூல்களுக்கு அட்டைகளை வடிவமைத்தேன். ஆனால் அவர் வெளியிட விரும்பி அட்டை வடிவ மைக்கப்பட்டு (அட்டைகள்) அச்சிடவும் பட்ட 'ஆரணி', 'வைட்டமின் இரகசியங் கள்' போன்ற நூல்கள் வெளிவரவே இல்லை. அவர் சேரனின் 'கண்ணீரின் மறு பக்கம் குருதி' என்கிற நூலை வெளிக் கொண்டுவரும் முயற்சியிலும் இருந்தார். அத்துடன் '1971 ஏப்ரல் நினைவுக்குறிப்பு' என்ற ரஞ்சித் ஹேன்நாயக்க ஆராய்ச்சி எழுதிய நூலையும் வெளிக் கொண்டு வரும் முயற்சியிலும் இருந்தார். இந்த நூல் 71ம்ஆம் ஆண்டு இடம்பெற்ற சேகுவாரா கிளர்ச்சி பற்றியது. இந்த இரண்டு நூல் அட்டைகளையும் நான் வடிவமைத்திருந்தேன். அவை அச்சிடக் கப்பட்டும் இருந்தன. ஆனால் அவை எவையும் வெளிவரவில்லை. அவர் இரண் டாயிரங்களில் ஒரு நாவலை வெளிக் கொண்டுவரும் முயற்சியிலும் இருந்தார். ரொறன்ரோவில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை வைத்து அந்த நாவலை எழுதிக் கொண்டிருந்தார். நாங்கள் பல தடவை இந்த நாவல் பற்றி சந்தித்துப் பேசி இருக்கிறோம். ஆனால் அவர் அந்த நாவலை எழுதி முடித்ததாகத் தெரியவில்லை.

அவர் விளம்பரம் பத்திரிகையால் வெளி யிடப்பட்ட தமிழோசை என்ற சஞ்சிகை யின் ஆசிரியராக இருந்தார். நான் அதன் வடிவமைப்பாளராக இருந்தேன். அந்த சஞ்சிகையை வடிவமைக்கும் பொழு துகளில் அவர் பெரும்பாலும் என்னோ டிருப்பார். அப்பொழுது அவருக்குள் ஒரு வடிவமைப்பாளன் உட்கார்ந்திருப் பதை நான் உணர்ந்து கொண்டேன். அவர் அந்த சஞ்சிகையில் பல புதுமை- களைப் புகுத்தினார். சிறிய சிறிய செய்திகளாகப் பல பக்கங்களில் தகவல் களை கொண்டுவந்தார். கவிதைப் பக்கங் களை வடிவமைக்கிறபோது வெளியை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்பார். பல முக்கிய எழுத்தாளர்களை அந்த சஞ்சிகையில் எழுத வைத்தார்.

அவர் ஈழப் பிரச்சினையில் மிக விரிவான அறிவு கொண்டவர் என்பதை நான் அறிந்து கொண்டது 90களின் நடுப்பகுதி யில் நடந்த விவாதம் ஒன்றில். அந்த விவாதம் இவ்வாறு ஆரம்பித்தது 'இலங் கையில் தமிழர்களுக்கு என்ன பிரச் சினை'. செழியன் எமது அரசியல் போராட் டத்தையும் அதன் வரலாறையும் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் அன்று விளங் கப் படுத்தினார். அன்றுதான் அரசியல் ரீதியாக அவர் எவ்வளவு தெளிவான நிலைப்பாட்டுடன் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். பலரும் இலங் கையின் இனப்பிரச்சினையின் ஆழம் புரி யாமல் தமது தனிப்பட்ட அனுபவங்களைக் கொண்டு தமது நிலைப்பாடுகளை எடுத்த போது செழியன் தெளிவான- வராகவே இருந்தார். பின்னர் ஒருநாள் திரைப்படவியலாளர் ஞானதாசுடன் பேசும் போது எண்பதுகளில் செழியனின் அரசி யல் வகுப்புகளில் தான் கலந்துகொண் டது பற்றிக் கூறினான். அப்போதே செழி யன் தங்களுக்கு மிகப்பெரும் அரசியல் ஆளுமையாக இருந்ததாகவும் கூறினான்.

அவருடைய ஆரம்ப கால நாடகங்களில் நான் ஏதோ ஒரு வகையில் ஒரு பங்கா ளனாக இழந்திருக்கிறேன். பல நாடகங் களில் ஒலி-ஒளி வடிவமைப்பாளராகவும் அவருடைய "என் தாத்தாவுக்கு ஒரு குதிரை இருந்தது' நாடகத்தின் உதவி இயக்குனராகவும் இருந்திருக்கிறேன். அவ ருடைய நாடகப் பிரதியில் தேவையின்றி எந்த சொல்லும் இருக்காது. ஒரு வச னத்தை விட்டுவிட்டாலே அந்த நாடகத் தின் அர்த்தம் பிழைத்துப் போகும். அந்த நாடகங்கள் அனைத்தும்மிகவும் அங்கதச்சுவை கொண்டவை.


நாங்கள் கலந்து கொள்ளும் ஒரு சந் திப்பை கலகலப்பாக்க எங்களில் எத் தனை பேருக்கு முடிகிறது. ஆனால் அது செழியனுக்கு இயல்பாகவே வந்தது. செழியன் இருக்குமிடம் எப்பொழுதும் கலகலப்பாகவே இருக்கும். அவருடைய நகைச்சுவைகள் யாரையும் காயப்படு துபவை அல்ல. அவை நீண்ட நாட்கள் கழித்தும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக் கும் அற்புதமான அங்கதங்கள்.

ஒரு மகத்தான கலைஞனை, கவிஞனை இழந்து நிற்கும் நமது சமூகத்தின் துய ரில் நானும் பங்கு கொள்கிறேன். போய் வா தலைவா!












karuna@thaiveedu.com

# சந்திப்போம்

- அ. முத்துலிங்கம் -

நான் செழியனை முதன்முதலில் சந்தித்தது 2001ம் ஆண்டு ரொறன்ரோவில் நடந்த ஒரு விழாவில். என்னை 'அண்ணை' என்று அழைத்தார். கூச்சமாக இருந்தது. நீண்ட காலமாக என்னை அப்படி ஒருவரும் அழைத்தது கிடையாது. அவர் குரல் கனிவாகவும், குனிந்து கிட்டக் கேட்க வேண்டும் என்பது போல மிருதுவாகவும் இருந்தது. உடனேயே ஓர் அந்நியோன்யம் எங்களுக்கிடையில் உண்டாகிவிட்டது. அந்த முதல் சந்திப்பே என்னை மயக்கிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். தன்னுடைய 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' புத்தகத்தை எடுத்து கையொப்பமிட்டு தேதியை 2001 என்று எழுதி எனக்கு தந்தார். நான் செழியனை கவிஞர் என்றும் பாடகர் என்றும் அறிவேன். அந்தப்புத்தகத்தை கையில் பெற்றபோதுதான் அவரை எழுத்தாளராக அறிய நேர்ந்தது. விடைபெறும் போது 'அப்ப சந்திப்போம்' என்றார். நானும் 'சந்திப்போம்' என்றேன்.

சில நாட்களில் மறுபடியும் அவரை சந்தித்தபோது அவர் என்ன செய்கிறார் என்று கேட்டேன். பகுதிநேர வேலை செய்து கொண்டே, உணவில் ஊட்டச்சத்து பற்றி ஏதோ ஒரு படிப்பு படிப்பதாக உற்சாகத்துடன் சொன்னதாக ஞாபகம். 'படியுங்கள், என்ன நடந்தாலும் அதைமட்டும் கைவிட வேண்டாம்.' என்றேன். அடுத்து வந்த ஐந்து வருடங்களில் எப்பொழுது, எங்கே சந்தித்தாலும் அவரிடம் படிப்பைப் பற்றிக் கேட்டேன். அவரும் 'நிச்சயம் படிக்கிறேன்' என்றார். பின்னர், இரண்டாவது ஐந்து வருடங்கள் அதே கேள்வியை கேட்டபோது 'படிக்கத்தான் வேண்டும்' என்றார். மூன்றாவது ஐந்து வருடங்கள் 'அண்ணை, பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள். இனி எனக்கு படிப்பு தேவையில்லை' என்றார், அதே உற்சாகத்துடன்.

அவர் தந்த புத்தகத்தை வாசித்து முடித்துவிட்டு ஒருநாள் தொலைபேசியில் அழைத்துப் பேசினேன். ஆங்கிலத்திலும் தமிழிலும் அபூர்வமாக டைரிக் குறிப்புகள் புத்தகமாக வெளிவந்திருக்கின்றன. ஈழத்திலிருந்து டைரிக் குறிப்புகள் புத்தகமாக வெளிவந்து நான் படித்தது கிடையாது. இதுவோ, ஒரு போராளியின் டைரிக்குறிப்புகள். டிசெம்பர் 1986ல் ஆரம்பித்து தை மாதம் 1987ல் முடிவுக்கு வருகிறது. இரண்டே இரண்டு மாதங்கள்தான். ஒரு போராளி படும் பாடுகள், அவன் சந்திக்கும் சவால்கள், பொய்மைகள், துரோகங்கள், படுகொலைகள் என மிகத் தெளிவான வார்த்தைகளில் உண்மையாகப் பதியப்பட்ட எண்ண ஓட்டங்கள் அதில் காணப்படும். சோடிப்பதற்கோ அலங்காரம் செய்வதற்கோ ஒன்றுமில்லை. பச்சை உண்மை அப்படியே வார்த்தைகளாக மாறி ஒரு திகில் நாவல்போல பதிவாகிக் கிடந்தது. உலகத்து போர் இலக்கியங்களில் இதற்கு மதிப்பான ஓர் இடம் இருக்கிறது என அவரிடம் சொன்னேன்.

கனடாவில் தமிழ் இலக்கியத் தோட்டம் என்ற அமைப்பை 2001ல் தொடங்கிய போது செழியன் எங்களுடன் இணைந்து முழுமுச்சாக உழைத்தார். ஆரம்பத்தில் இந்த இயக்கம் பல இன்னல்களைச் சந்தித்தது. அவருடைய ஆலோசனைகளும், செயல்பாடுகளும் இயக்கத்தை முன்னெடுப்பதில் பெரும் உதவியாக இருந்தன. அவருடைய உடல் நிலை சீராக இருந்த அத்தனை வருடங்களும் அவர் எங்களுடன் சேர்ந்து உழைத்தார். அதை மறக்க முடியாது.

செழியன் கவிதைகள் எழுதுவது மட்டுமல்ல அதை பாடலாகவும் பாடும் திறமை கொண்டவர். மேடைகளில் அவருடைய பாடல்களை இசையுடன் பாடி இருக்கிறார். தீவிரமான நாடகப் பிரியர். நாடகங்கள் எழுதி நடித்திருக்கிறார். அவருடைய கவிதைகள் சில இசையமைக்கப்பெற்று கனடாவில் குறுந்தகடுகளாக வெளிவந்துள்ளன.

இவருடைய கவிதைகள் எளிமையானவை. சாதாரண மனிதர்களின் சாதாரண நிகழ்வுகள்தான் இவருடைய பாடு பொருள். அவற்றின் வீச்சு அகலமானது. சிக்கனமான வார்த்தைகளில் உணர்ச்சிகளைச் சொற்ப நேரத்தில் கொட்டிவிடும் தனித்தன்மையான படிமங்கள் அவை. கிராமத்து சொற்பிரயோகங்கள் அவ்வப்போது கவிதையின் செழுமையை கூட்டும். 'கடலை விட்டுப் போன மீன் குஞ்சுகள்' இவருடைய பிரபலமான கவிதை. மீன்குஞ்சுகள் மணலில் புரள்கின்றன. கோபுரத்தில் ஏறுகின்றன. பழுத்த இலைகளின் மேல் படுத்து உறங்குகின்றன. மீன்கள் என்ன செய்கின்றன என ஒவ்வொரு வரியும் சொல்லியபடியே நகரும். இறுதியில் கடலை விட்டுப்போன மீன் குஞ்சுகள் மறுபடியும் திரும்பவில்லை என்று கவிதை முடியும். அப்பொழுதுதான் அவர் மீன்களைப்பற்றி பேசவில்லை என்பது புரியவரும்.



செழியனுடைய கவிதை ஒன்றை நான் பலதடவை படித்து ரசித்திருக்கிறேன். எத்தனை தடவை படித்தாலும் ஒவ்வொரு தடவையும் அது புதிது போலவே தோன்றும், சிலசமயம் புதிய ஒரு கருத்தும் கிடைக்கும். படித்து முடிக்கும் போது மனமும் கனமாகிவிடும்.

*அவன் செத்துப்போய் விட்டான்*
*அவனுக்குப் பிரியமான துப்பாக்கியில்*
*இப்போ அவனது காதலி*
*சுடுவதற்கு பழகிவருகின்றாள்*
*மரணங்களை எதிர்கொண்டு*
*நாங்கள் காத்திருக்கின்றோம்*
*எங்கள் துப்பாக்கிகளுக்காக*
*புதிய தோழர்கள் காத்திருக்கின்றனர்.*
*பயிற்சி முடித்து விரைவில்*
*நீ திரும்பி வருவாயென*
*நம்புகிறேன்.*
*நீ வரும்போது*
*ஒருவேளை*
*நான் இல்லாமல் போகலாம்.*
*.... .... ....*
*என் சமாதியில்*
*அழுகையின் ஒலி கேட்கவே கூடாது.*
*என் சமாதியில்*
*முட்களைத் தாங்கி*
*அழகிய பூச்செடி ஒன்று*
*துளிர்விட்டு வளரும்*
*நான் நம்புகிறேன்.*

இந்தக் கவிதையை அவர் 23 வருடங்களுக்கு முன்னர் எழுதியிருக்கிறார். இதைப் படிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மனம் என்ன பாடுபடும். அவர்களைத் தேற்ற வார்த்தைகள் என்னிடம் இல்லை. அவர்கள் மனம் சமாதானம் அடையட்டும். அவர்களுக்காக நான் பிரார்த்திக்கிறேன்.

2001ல் அவர் கையெழுத்திட்டு தந்த 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து' புத்தகத்தை இன்று திறந்து அதிலே எழுதியிருந்த கடைசிப் பக்கத்தின் இறுதிப் பந்தியை படித்தேன். அவர் பிறந்த நாட்டை விட்டு புது நாடு தேடி அகதியாகப் புறப்பட்ட தருணத்தை இப்படி விவரிக்கிறார். பல வருடங்களுக்கு முன்பு படித்தபோதும், இப்போது படித்த போதும், அந்த வர்ணனை மனதைப் பிழிந்தது. 'என் தேசம். தந்தையர் வாழ்ந்த தாய்த் திருநாடு. தந்தையும் தாயும் கூடிக்குலவி வாழ்ந்த பொன்னாடு. விமானம் உயர உயரப் பறந்தது. என் தேசத்தில் இருந்து வந்த ஒளிக்கீற்றுகள். கண்சிமிட்டி விடைதருவதுபோல இருந்தது. இனிய தேசமே மறுபடியும் நான் வருவேன். மனிதன் எனும் இனம் எழுந்து வரும் நாளில் மறுபடி நான் வருவேன். ஒருவேளை என் முற்றாத கனவுகளோடு முதிர்ந்த வயதில் ஏதோ ஒரு நாட்டில் அகதியாய் அநாதைப் பிணமாய் பனிக் கட்டிகளுக்கு நடுவிலோ, இயந்திரங்களுக்கு அடியிலோ மரணித்துப் போகலாம். காற்றே, மரம் செடி கொடிகளே என் தலைமுறை மறுபடி இங்குதான் வேர் விட்டு இருதளிர் கரம் நீட்டி வளரும். என் புதல்வர்கள், அல்லது போனால் என் பேரர்களில் ஒருவர் வருவார்கள். இத்தாய்த் திருநாட்டை முத்தமிட வருவார்கள். இனிய தேசமே தெரிந்தோ தெரியாமலோ நான் ஏதும் தவறு செய்திருந்தால் தங்கள் கண்ணீரால் என் பாவங்களை இவர்கள் கழுவுவார்கள். தேசமே, என் தலைமுறையையாவது இங்கு வாழவிடு.'

பிறந்த நாட்டை விட்டு வெளியேறிய அந்தக்கணம் இவருடைய மனம் என்ன வேதனையுற்றிருக்கும், எத்தனை வலிகள் அங்கே மோதியிருக்கும் என்பதை இன்று கூட எம்மால் உணர்வது கடினம். அவருடைய சந்ததியில் ஒருவர் மறுபடியும் ஈழத்துக்கு திரும்புவார் என்ற நம்பிக்கை மட்டும் அவருக்கு உறுதியாக இருந்திருக்கிறது.

நான் அவரை கடைசியாக சந்தித்தது 2017 நவம்பர் 11ம் தேதி அன்று. தமிழ் பேராசிரியரும், எழுத்தாளருமான டேவிட் ஷல்மனுக்கு தமிழ் இலக்கியத்தோட்டம் வழங்கிய விருது விழாவில் செழியன் கலந்து கொண்டார். விழாவில் அத்தனை சனத்துக்கும் மத்தியில் என்னைத் தேடிக்கண்டு பிடித்து கைகுலுக்கினார். அடையாளமே தெரியாதபடி மெலிந்து உருக்குலைந்து காணப்பட்டார். அன்று அவர் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டிருக்கவே கூடாது. டேவிட் ஷல்மனுடைய புத்தகம் பற்றி அவர் கேட்டார். நான் அவருடைய உடல்நிலை பற்றி விசாரித்தேன். பின்னர் வழக்கம்போல 'அப்ப சந்திப்போம்' என்று சிரித்தபடி கூறி விடைபெற்றார். நானும் 'சந்திப்போம்' என்றேன். எங்கே என்று அவர் சொல்லவில்லை. எப்பொழுது என்றும் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை.



muththulingam.a@thaiveedu.com

# செழியனைப்பற்றி எழுதுவது...

- பா.அ. ஜயகரன் -

1983 ற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புற்றிருந்த காலத்தில், யாழ் வைத்தியசாலை பின்மதில் விடுதலைப் போராட்ட சுவரொட்டிகளால் நிறைந்திருக்கும். அச் சுவரொட்டிகள் தாங்கிய பல கவிதைகள் செழியன் எனும் ஈழ மக்கள் விடுதலை முன்னணிப் போராளியின் கவிதைகள் என பின்னர் அறிந்து கொண்டேன். புலம்பெயர்ந்து மொன்றியாலில் வாழ்ந்து வந்த காலத்தில் (1986-1989) செல்வம் அவர்கள் தமிழர் ஒளி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட 'பார்வை' சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். அக்காலத்தில் கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியத்தின் 'தமிழ் எழில்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் நானும் ஆனந்தப்ரசாத், நாராயணமூர்த்தி ஆகியோர் செயற்பட்டு வந்தோம். இலக்கியத் தொடர்பால் 'காலம்' செல்வத்தின் நட்பு எமக்கு கிட்டியது. அச்சந்தர்ப்பத்தில்தான் செழியன் மொன்றியாலில் புலம்பெயர்ந்து வாழ்வதாக அறிந்துகொண்டோம். 'காலம்' செல்வம் அவர்களது வீட்டில் முதற் தடவையாக நானும் மறைந்த எழுத்தாளர் குமார்மூர்த்தியும் செழியனை சந்தித்தோம். விடுதலைப்போராட்ட அமைப்புகள் குறித்தும், உட்கட்சிப் போராட்டங்கள் குறித்தும் கதைத்தாக ஞாபகம். மக்கள் ஜனநாயக பண்பாடு குறித்த பொதுவான புரிதலை நாம் அனைவரும் கொண்டிருந்தோம். பொதுத் தளத்தில், விடுதலைப் போராட்டம் குறித்தான காத்திரமான விமர்சனத்திற்கான சூழலோ அல்லது விடுதலைப் போராட்டம் குறித்த கற்றல் விவாதித்தலுக்கான சூழலோ அற்றிருந்த காலம் அது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற வேட்கை எம் எல்லோருக்குமிருந்தது.

எம்மில் பலரும் ரொறன்ரோவுக்கு புலம்பெயர்ந்தோம். 1989ல் ரொறன்ரோவில் பல இளைஞர்கள் இணைந்து மக்கள் ஜனநாயக பண்பாட்டுக்கான பொதுத்தளத்தை உருவாக்குவது குறித்து தொடர்ச்சியாக விவாதித்து வந்தோம். அவ்விவாதங்களில் செழியனும் இணைந்து கொண்டார். அதன் பிற்பாடு செழியனோடு நெருக்கமாகப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. தனது கருத்தை மிக ஆணித்தரமாக, சுருக்கமாக, மெல்லிய தொனியில் எப்போதும் வைப்பார். இவ்விவாதங்களின் தொடர்ச்சியாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது, சமூக நீதிக்கான போராட்டங்களுடன் இணைவது மற்று தோழமையுடன் ஆதரவை நல்குவது, இலங்கை அரசின் மனிதவுரிமை மீறல்களை வெளிக்கொணர்வது தமிழ் அமைப்புகளின் ஜனநாய விரோத செயற்பாடுகளை கண்டிப்பது, இலங்கை சிறுபான்மை இனங்களில் உரிமைக்கான அனைத்து சக்திகளையும் இணைந்து பணியாற்றுவது, ஈழ விடுதலைப் போராட்டத்தில் மாற்றுக் கருத்துக்கான ஆரோக்கியமான வெளியை உருவாக்குவது, கல்வி, கலை, இலக்கிய முயற்சிகளுக்கூடாக மக்கள் ஜனநாயக பண்பாட்டை வளர்ப்பது இலங்கை இனப் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வை எட்டுவதற்கான சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குவது எனும் பல்வேறு செயற்பாடுகளை முன்வைத்து 'தமிழர் வகைதுறைவள நிலையம்' எனும் தாபனத்தை 1989ல் கட்டமைத்து அதன் முதன் முயற்சியாக 'தேடகம்' எனும் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு 'தேடல்' சஞ்சிகையை வெளிக்கொணர்வது எனவும் முடிவு செய்தோம். தேடல் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் செழியனும் இருந்தார். 'ஒரு மனிதனின் நாட்குறிப்பிலிருந்து..' எனும் அவரது அரசியல் அனுபவத் தொடரை தேடலில் எழுத ஆரம்பித்தார்.

அக்காலகட்டத்தில் 'தாயகம்' வாரப்பத்திரிகை ஜோர்ச் குருசேவ் அவர்கள் வெளியிடப்பட்டது. தாயகம் வார இதழ் உலகத் தமிழர் அமைப்பினால் பெரும் நெருக்கடிக்குள்ளானது. இவ்வேளையில் தாயகம் இதழை தொடர்ச்சியாக கொண்டு வரும் முயற்சிக்கு எம்மில் பலரும் ஆதரவை அளித்தோம். செழியனும் தாயகத்தில் எழுத ஆரம்பித்தார். கருத்துக்களை கருத்துக்களால் முகம் கொடுக்கவேண்டும் என்ற ஆதங்கத்துடனும், புலம்பெயர் மண்ணிலும் நிலவிய அராஜகப் போக்கை எதிர்க்கும் நோக்கிலும் ஆதரவை செழியன் தன் எழுத்தால் வழங்கினார்.



தேடகத்தினால் கலைவிழா ஒன்று செய்வது என்று முடிவாகியது. 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்ற தலைப்பில் அந் நிகழ்வு 'ரோஸ்டல் கல்லூரி' அரங்கில் 1991ல் இடம்பெற்றது. அந்த விழாவை நிறுத்துவதற்காக பல இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. 'ஊரில் உறவினர்கள் கொல்லப்படுவார்கள்' என்ற எச்சரிக்கையும் விடப்பட்டது. இவற்றையும் மீறி அந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்ற கவிதை நிகழ்வை அவரது கவிதைகளோடு பல ஈழத்து கவிஞர்களின் கவிதைகளையும் தொகுத்து வழங்கியிருந்தார். அந்த கவிதா நிகழ்வில் செழியனுடன் அவரது துணைவி துளசி அவர்களும் முக்கிய பங்காற்றியிருந்தார். பக்கவாத்திய கலைஞர்களைத் தேடி நாங்கள் அலைந்த துயர் இன்னமும் நிற்கிறது. கண்ணன் இசையமைத்திருந்த பல பாடல்களை கவிதா நிகழ்வில் நாங்கள் பாடியிருந்தோம். எம்மில் ஓரளவேனும் பாடக்கூடிய ஆற்றல் செழியனுக்குத்தான் இருந்தது. இறுதி நாட்களில் நண்பர் ஆனந்தப்ரசாத் வருகை தந்து எங்களைச் சற்று மெருகேற்றினார். இந்த நிகழ்வு ரொறன்ரோவில் சீரிய கலை இயக்கத்திற்கான தூண்டுதலைத் தந்தது. அதில் செழியனின் பங்கு குறிப்பிடத்தக்கது.

1992ல் இடம்பெற்ற 'சொல்லாத சேதிகள்' கலை நிகழ்விலும் 'பேசுதல்' எனும் கவிதா நிகழ்வை செழியன் தயாரித்திருந்தார். எனது பேசுதல் எனும் கவிதையை அவர் அந்நிகழ்வில் புகுத்தியிருந்தார். கவிதா நிகழ்வுக்கான பாடல் சிலவற்றையும் அவர் எழுதி மெட்டமைத்து பாடியும் இருந்தார். 'அகதியில்லை அகதியில்லை என்று சொல்வோம்...நாமக்கோர் தேசமுண்டு நிமிர்ந்து செல்வோம்' என்ற அவரின் பிரபல்யமான பாடல் 'பேசுதல்' கவிதா நிகழ்வில் தான் இடம்பெற்றது. காத்திரமான செயற்பாடுகள் எப்போதும் சமூகத்தின் செழுமைக்கான சுவட்டை விட்டுச் சென்றுகொண்டேயிருக்கும். அவ்வாறான காத்திரமான செயற்பாட்டில் செழியன் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தவர். ஆக்கபூர்வமான விடயங்கள் குறித்து அவரது கலந்துரையாடுவது பரஸ்பர கற்கையாய் எப்போதும் இருக்கும்.

அவர் வெளிப்படையானவர். அதனால் அவர் மீதான மதிப்பு எப்போதும் எனக்கு இருந்தது. அவர் எழுதிய 'பெருங்கதையாடல்' என்ற நாடகம் குறித்து அவருடன் எனது விமர்சனத்தை வைத்தேன். அப்போது அவர் 'ஜெயா, என்ட பிரதியைத் தாரன் வாசித்து என்ன செய்யலாம் என்று சொல்லுங்கோ' என்றார். அது எனக்கு பெரும் நெருடலாக இன்னமும் இருக்கிறது. ஒருவரது பிரதியை திருத்தும் அளவுக்கு நான் ஒன்றும் வித்தகன் இல்லை. ஆயினும் அவர் என்னை எதிர்கொண்ட முறை செழியன் என்ற நல்ல மனிதனை என் முன்னே நிறுத்திக்கொண்டேயிருக்கும். பின்னர் ஒரு முறை 'தனது இயக்கத்தின் பிரபலமான கதையை ஒரு பிரபலமான எழுத்தாளருக்கு சொல்லியிருப்பதாகவும்...அதுவொரு பிரபலமான சஞ்சிகையில் வரவிருக்கிறது அதை வாங்கி வாசியுங்கோ' என்றார். அன்றுதான் செழியனுடன் கோபித்துக்கொண்ட நாள். செழியன் ஒரு சிறந்த எழுத்தாளர். ஏற்கனவே தனது அரசியல் அனுபவங்களை அடிப்படையாக வைத்து 'ஒரு மனிதனின் நாட் குறிப்பிலிருந்து', 'வானத்தைப் பிளந்த கதை' எனும் படைப்புகளைத் தந்தவர். இவை இரண்டும் பலரதும் கவனத்தையும் ஈர்த்த படைப்புகள். 'உங்கள் கதையை நீங்கள் எழுதுங்கள்... ஏன் இந்த வேலை பார்க்கிறீங்கள்' என்று அவரோடு கோபித்துக்கொண்டேன். எங்கள் கோபங்களை எல்லாம் மதுவாக்கி விழுங்கக்கூடிய வல்லமையில் அவர் இருந்ததால் என் கோபம் பயனளிக்காமல் போய்விட்டது.

மாற்றுக் கருத்துக்கான குறியீடாக இன்றும் தேடகம் திகழ்கிறது என்றால், அதன் பின்னால் பலரது அர்ப்பணிப்புகள் இருந்திருக்கின்றன. இருந்தும் வருகின்றது. நண்பர் செழியனின் பங்களிப்பும் இச்சந்தர்ப்பத்தில் மிக முக்கியமாக குறிப்பிடவேண்டியது. நம்பிக்கையை எம் மனங்களில் விளைவித்த கவிஞனாக, இயற்கையின் காதலனாக, வெளிப்படையான மனிதனாக, சமூக மேம்பாட்டுக்காக தன்னை அர்ப்பணித்த போராளியாக என்றும் அவரை நினைவில் நிறுத்திக்கொள்ள முடியும்.



jayakaran@thaiveedu.com

# அஜயன் கவிதைகள்

## கடவுளை மறுபடி அவர்கள் காணும்போது

நிலத்தில் விழுந்து வணங்கியது
நெடுத்த பனைமரம்
பனம் பழங்கள் உருண்டு உதிர

இலைகளோடு சேர்த்து மஞ்சள் பூக்களை
கிளையோடு பிடுங்கிக் கொடுத்தது
பூவரசு வலிக்க

அடுத்த ஊரில் திருவிழா முகப்பில்
நின்று கொண்டிருந்த தென்னை ஓடிவந்தது
ஓலைகள் அதிர

இரவுமில்லா பகலுமில்லா ஒருபொழுது
வடலிகளின் மறைவிலிருந்து கடவுள் வந்தபோது
குட்டிகளோடு முட்ட முட்ட தண்ணீர் குடித்துக்
கொண்டிருந்த
வாழைகள்
இலைகளை விரித்து வாழ்த்தின

மகிழ்ந்து போனார் கடவுள்
ஒருவரம் கேட்குமாறு வற்புறுத்திக் கூறினார்
கூடினார்கள் பேசினார்கள்
ஒருமித்த குரலில் கூறினார்
“சமாதானம்“ வேண்டுமென்று

கடவுள் மனம் இரங்கினார்
சமாதானத்திற்காக என்னவேண்டுமென்று
கேட்கச் சொன்னார்
மீண்டும் கூடினார்கள் பேசினார்கள்
துப்பாக்கிகளைக் கேட்டு வாங்கிக் கொண்டனர்

கடவுள் மறைந்து போனார்

மழையும் வெயிலும்
காற்றும் குளிருமாய் ஆண்டுகள் கரைய
மறுபடி கடவுளைக் கண்டதாக
கதைகள் பரவின

கிழிந்து போன சட்டையோடு
கடவுளைக் கண்டதாக
வேலியிலிருந்து குதித்து
ஓணான் சொல்ல

அரையில் கோவணமும் இல்லை
ஒற்றைக் கையால் பொத்திப் பிடித்தபடி
கடவுள் ஓடியதைக் கண்டதாக
பச்சை ஓலை உதைந்ததால்
உயரத்தில் இருந்து தலைகீழாய் விழுந்து
முதுகு முறிந்த காவோலை சொன்னது

விளக்குகள் எரியாத வீட்டு முற்றங்களில்
மணிகள் எழாத கோயில் வளவுகளில்
பிணங்கள் ஒதுங்கும் கடற்கரை மணலில்
சவுக்குத் தோப்பில்
ஊரின் எல்லையில்
நான்கு வீதிகளும் சந்திக்கும் சந்தியின் நடுவில்
காத்திருக்கிறார்கள்
ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய்

கடவுளிடம் ஒரு வரம் கேட்பதற்காக

“கடவுளே இனி சமாதானமே வேண்டாம்”

## எழுதியே முடிப்பர்

ஒரு குளிர்காலத்தின் பின்
துளிர்க்கும் மரங்கள்
பச்சைப்புற்கள் தலைநீட்டும்.

மூடித்தாளிட்ட ஜன்னல்கள்
திறக்கப்பட்டு
அனுமதிக்கப்பட்ட காற்று

வெண்பனி மறைந்துதெருக்களில்
மனிதர்களின் நடமாட்டம்

அங்கே
வயல்களின் மேலே
நெருப்பும் புகையும்

மரணம் மலிந்து போன தேசம்
முதுகுக்குப் பின்னே முரட்டுத் துவக்குகள்
முழுசிப்பார்த்தபடி,

இரவு மட்டும் அல்ல
இந்த மண்ணில் இருப்பும்
அச்சத்தைத் தருகிறது.

கிழட்டுப் பலாமரத்தில்
பச்சோந்தியொன்று.
வண்ணத்துப் பூச்சிகள் சிறகடிக்கின்றன.

தேசத்தின் வலிமை
வலிமையை மீறும் இருப்பை
மரணமும் துயரமும் மாற்றியதுண்டா?

இருளுக்குப் பின்னும் அச்சமின்றி
ஒற்றையடிப் பாதையில்
சிறுவன்

இன்னமும்
முகில்களுக்கு மேலே
தெரியும் சில நட்சத்திரங்கள்.

எஞ்சியிருப்பவை
கரித்துண்டுகளாயினும்
எழுதியே முடிப்பர்.

## சூரியனுக்கும் வெட்கமில்லை

காகங்கள் கரைய
சூரியன் எழுகின்ற தேசம்

காகங்களின் கூடுகளில்
குயில்கள் முட்டையிடுகின்றன

குயில்கள் பாடி
எறும்புகளின் தூக்கத்தை கெடுத்ததற்காக
காகங்களின் கூடுகளைப் பிடுங்கினர்
தீயை வளர்த்து எரித்து
சாம்பலைக் கடலினில் கொட்டினர்

காகங்கள் அலறின
குயில்கள் கூடி சத்தமிட்டன
வண்டுகள் குமிறின

பூமி அமுக்கம் கூடியது
பருத்து
எந்த நேரமும் எந்தப் பக்கமுமாய்
வெடிக்கலாமெனப் பயந்தனர்

மனிதர்களின் நிலையே பரிதாபமானது
சாப்பிடுவதற்காக மூன்று தடவை மட்டும்
வாயைத் திறக்கலாமென்றாகியது

கொடுமை என்று சொல்லி
ஒருத்தி கொள்ளி வைத்துக் கொண்டாள்
கொட்டாவி விடுவதற்குமாய்
ஒருதடவை அனுமதி வேண்டியவன்
பனைமரத்தடியில் வேர்களின் முனைகளில்
சிதறிப் போனான்

மூன்று தடவையை சாத்தியமாக்க
மூளையைக் கழற்றி
கழுசானுக்குள் திணித்துக் கொண்டான்
ஒருவன்

காட்டுக்குள் இருந்த விலங்குகளெல்லாம்
நகருக்குள் புகுந்தன
மனிதர்களைத் தழுவி முத்தமிட்டன
ஆடின, பாடின மகிழ்ந்து போயின

பள்ளி வாசல்களில்
அரச மரக்கிளைகளில்
முதிரையும் வீரையும் முற்றி விளையும்
நிலங்களின் பரப்புகளில்
நாறிக் கிடந்த பிணங்களை
மனிதரும் விலங்குகளுமாய்
குந்தியிருந்து சாப்பிட்டன

கரடியின் முதுகைச் சொறிந்து கொடுத்தான் ஒருவன்
கழுதையின் முலைகளில் மகிழ்ந்தான் மற்றவன்
பன்றிகளோடு புணர்ந்து களைத்தான் இன்னொருவன்

பொன் நொச்சி மலர்கள் விரியப்பாடிய
வண்ணாத்திப் பூச்சிகளை
ஒவ்வொன்றாகப் பிடித்து
இறக்கைகளைப் பிய்த்து கோர்த்து அணிந்து
எறும்புகள் நடனம் ஆடின

சூரியன்
கோவணம் கூடக் கட்டவில்லை
கதிர்களைக் கழற்றி நிலத்தில் எறிந்துவிட்டு
வானத்தில் ஏறி
நிர்வாணமாய் நிற்கிறான்

மனிதர்களைப் போலவே
சூரியனுக்கும்
இப்போ வெட்கம் என்பதேயில்லை



# செழியன் என்ற மனிதநேயன்

- பாஸ்கரன் -



உள்மனதை எழுத்தில் வடிக்கும் உண்மையான கவிஞன். உழைக்கும் மக்களின் விடிவுக்காகத் தன்னையே தேய்த்துக் கொண்டவன். தன் வாழ்வுக்கும், எழுத்துக்கும் கருத்துவழிப்பட்ட அர்த்தத்தைத் தேடியவன். அநீதிகளுக்கு எதிராக ஒரு சிறுகல்லைத்தன்னும் இறுதிவரை எறிந்து கொண்டே இருந்தவன்.

அமைதியாகத் தூங்கிவிட்டான்.

அவனிடம் ஒரு கனவு இருந்தது. ஒடுக்கு முறைத் தளைகளிலிருந்து விடுதலை பெற்ற சுபீட்சகரமான சமூகத்தை அவன் தன் கண் மடல்களின் உள்ளே நித்தியமாக வரைந்து வைத்திருந்தான். வர்க்க ஒடுக்குமுறை, இனஒடுக்குமுறை, சமூக ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம், மடமை என்பன ஒழிந்த ஒரு சமூக மாற்றத்துக்காக நின்றான். அதற்கான சித்தாந்தத் தேடுதலில் தன்னை ஆழப் புதைத்துக் கொண்டான். அதை நோக்கிய செயற்பாட்டில் தன் கருத்தொத்த தோழர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டான். தவறுகள் கண்ட இடமெல்லாம் கேள்வி எழுப்பினான். அவனின் இருப்பு மறுக்கப்பட்டு ஒரு சருகாய்த் தூக்கி எறியப்பட்டாலும், சென்று விழுந்த இடத்தில் நின்றும் தன் எதிர்ப்பைப் பதிவுசெய்தான்.

போராட்டம், புரட்சி, சமூக மாற்றம் என்பனபற்றி அக்கறையற்றிருந்த எழுபதுகளின் கடைப்பகுதி, அல்லது எண்பதுகளின் தொடக்கத்தில் மாணவப் பராயத்திலிந்த செழியன் என்ற எம் சிவகுமாரனின் நாட்டம் சற்று விதிவிலக்கானதாக இருந்தது. அவன் கருத்தியல் கல்வி வட்டமொன்றில் தத்துவார்த்த விவாதங்களில் மும்மரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கிராமியக் கூலி விவசாயிகள் மீதான ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்களது மீட்சிக்கான போராட்டவழிமுறைகள், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட மலையைத் தொழிலாளர்களது தொழிற்சங்க இயக்கத்தின் மந்த நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய அவசியப்பாடு போன்றவற்றை எடுத்துப் பேசினான். வர்க்கப் போராட்டம், பொருளாதார சமத்துவம், சமூகப் புரட்சி பற்றியெல்லாம் மார்க்ஸ், லெனின், மாவோ போன்ற சித்தாந்த மூலவர்கள் கூறியவற்றை நம் நாட்டு யதார்த்தத்தில் எப்படிப் பயன்படுத்துவதென்பதுபற்றியும் விவாதித்தான். இன விடுதலைப் போராட்டம், வர்க்கப் போராட்டம் என்பனவற்றுக்குள் உள்ள முரண்நிலைகளை விவாதித்தான்.

இலங்கையில் தேசிய முரண்பாடு கூர்மை பெற்று, அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாட்டை மேவி, இன முரண்பாடு பிரதான முரண்பாடாகிவிட்ட நிலையில் இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் வர்க்க விடுதலை சாத்தியமாகாதென்ற நிலைப்பாட்டை அவன் சற்றுத் தயக்கத்துடனேதான் அங்கீகரித்தான். எனினும் வர்க்க விடுதலையை நோக்கி தேசிய விடுதலையை முன்னெடுப்பது என்ற பணியில் தன்னை அமைப்பு ரீதியாக ஈடுபடுத்திக் கொள்ள முன்வந்தான். வர்க்க ஒடுக்குமுறையாளர்களான நில உடமையாளர்களும், தமிழ் தேசிய முதலாளி வர்க்கமும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முன்னிலை வகிக்கும்போது அவர்களை நட்பு சக்திகளாக வரித்துக்கொள்வதில் பாரிய மனத்தயக்கம் அவனுக்கிருந்தது. இதே சக்திகள்தான், சாதாரண சிங்கள மக்களை எதிரிகளாகச் சித்திரித்து, சிங்கள முற்போக்கு சக்திகளுடன் நட்புறவுக்குத் தடையாக இருக்கின்றனவென்று எச்சரிக்கை கொண்டிருந்தான். அத்தோடு, மலையகத் தொழிலாளர்களின் அவல நிலைக்கும், முஸ்லிம் மக்களின் அச்சங்களுக்கும், இத் தேசிய விடுதலைக்குள் அர்த்தபூர்வமான தீர்வுகள் காண்பதுபற்றி இவர்களுக்கு அக்கறையில்லை என்ற விசனம் கொண்டிருந்தான். பெண்விடுதலைக்கு இப்போராட்டம் கொடுத்த விளக்கத்தில் முரண் கண்டான்.

இதனூடே தன் போராட்டத்தளத்தை அவன் தேடியபோது அவனுக்கிருந்த தேர்வாக ஈழ மாணவர் பொதுமன்றம் அமைந்தது. அதன் வாயிலாக மாணவர் சமூகத்துக்கும் பொதுமக்களுக்கும் விழிப்புணர்வூட்ட விழைந்தான். அதற்காக வீடு வீடாகச் சென்று நிதிசேகரித்து 'ஈழமாணவர் குரல்' என்ற பத்திரியை வெளிக்கொணர்வதில் முன்நின்றான். பத்திரிகை மட்டுமன்றி, கல்வி வட்டங்கள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்று எல்லா வகையிலும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த இடையறாது உழைத்தான்.

போராட்டம் தலைமறைவு இயக்கங்களாக பரிணமித்தையடுத்து, ஈழமாணவர் பொது மன்றத்துக்குப் பாதிப்பேற்படாவண்ணம், அதனை திரு. டேவிற்சன் தலைமையிலான கமிட்டியிடம் பாரப்படுத்திவிட்டு, 1981ல் இந்தியாவில் நிகழ்ந்த அமைப்பாளர் மாநாட்டிற்குச் சென்று அங்கு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உருவாக்கத்தில் பங்காற்றினான். அதன் யாழ் பிராந்தியப் பொறுப்பாளராக கடமையேற்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி மக்களை அரசியல்மயப்படுத்துவதற்கும், சமூக ஜனநாயகக் கருத்துக்களை வலுப்படுத்துவதற்கும் பாடுபட்டான். அவனது அர்ப்பணமிக்க செயற்பாட்டுக்கு அங்கீகாரமாக 1984ல் இந்தியாவில் நிகழ்ந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இன் முதலாவது காங்கிரஸில் அவன் மத்திய கமிட்டி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஜூலைக் கலவரத்தின்பின் ஏற்பட்ட வேகமான ஆயுதமோக அலையில் ஈழவிடுதலைப் போராட்டத்திலிருந்து அன்னியப்பட்டு விடாதிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனது கட்சிக்கு எழுந்த நிலையில், கட்சிக்குள் இராணுவவாதம் எதேட்சாதிகாரம் தலைதூக்கிவிடாதிருக்க உட்கட்சிப் போராட்டங்கள் நடத்தினான். பாட்டாளி வர்க்கக் கொள்கையில் நிலைகொண்டே ஈழ விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தி நின்றான். ஈழவிடுதலை இயக்கங்களில் தலைதூக்கிய அராஜகப் போக்குகளுக்கெதிரான ஜனநாயகப் போராட்டங்களைப் பகிரங்கமாக முன்னெடுத்தான். ஆனால் மாற்றுக் கருத்துத்தாளர்களின் போராடும் உரிமையே மறுக்கப்பட்டு, அவன் சொந்த மண்ணைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தபோது, அவன் தன்னை இப் போராட்டப் போக்கின் திசைவழியிலிருந்து விடுவித்துக்கொண்டான். இருந்தும் அவனது போர்க்குரல் வேறு தளங்களில் தொடர்ந்தும் ஒலித்தது. கவிதை, சிறுகதை, நாவல் இலக்கியம், நாடகம் என அவன் பயணித்துக்கொண்டே இருந்தான். அவன் தன் கவிதையொன்றில் எழுதியது போல், 'மரணம் ஒரு முடிவல்ல' என்பதை தன் வாழ்வில் நிரூபித்தான்.

அவன் இயல்பில் ஒரு கவிஞனாக இருந்ததால், அவனது விமர்சனப் பார்வைகளில் கலைஞனுக்குரிய மிகையூட்டம் மற்றும் பரிமாண விகாரங்கள் தொனித்தாலும் அவனது கோணத்திலான அடிப்படை உண்மைகள் அங்கு பொதிந்தே இருக்கும். மக்கள் சார்பான சத்திய ஆவேசம் அவனை சமநிலை கடந்து உச்ச உணர்வுத் தளத்தில் சஞ்சரிக்க வைத்திருந்தாலும் அவனது கோபம் ஒரு நியாயத்தை வேண்டி நிற்பதை எவராலும் மறுக்கமுடியாதிருக்கும். அவனது கேள்விகளின் முன் விடைகள் இன்னும் மண்டியிட்டே நிற்கின்றன.

### அவன் எம் போராட்டத்தில் வழங்கிய பங்களிப்புகளில் சில:

- ஈழ விடுதலைப் போராட்டத்திற்குள் வர்க்க விடுதலை சிந்தனையை நிலையூன்ற அவன் முன்னெடுத்த சிறுப்பிட்டி மக்களின் கூலி உயர்வுப் போராட்டம். கோரிக்கை மறுக்கப்பட்ட அம் மக்களின் வாழ்வாதாரத்துக்காக அவன் உருவாக்கிய ஜனசக்தி சவர்க்காரத் தொழிற்சாலை, மற்றும் கல்வி விழிப்புணர்வுக்கான நூல்நிலையம். மத்தாளோடை கல்லுடைக்கும் தொழிலாளர் போராட்டம். பரந்தன் இரசாயனத் தெழிற்சாலை தொழிலாளர்களின் போராட்டத்திற்கான ஆதரவு, ஈழத்தொழிலாளர் சங்க உருவாக்கத்தில் ஆரம்பகர்த்தாவாக அவனது பாத்திரம்.
- ஈழமாணவர் பொதுமன்றத்தின், கல்வி வெள்ளையறிக்கைமீதான போராட்டம், மேதினக் கூட்டங்கள், பாதயாத்திரை ஆகியவற்றில் அவனது பங்கு.
- ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியூடாக பெண்ணுரிமைக் கருத்துக்களை முன்நிறுத்தியமை.
- தெருநாடகங்கள், மேடை நாடகங்கள், கவிதா நிகழ்வுகள், சினிமா விமர்சனக் கூடங்கள் ஆகிய அவனது கலையிலக்கிய முன்னெடுப்புகள்.
- அரசியல் கருத்தரங்குகளிலும், நூல் சேகரிப்பிலும் அவன் மேற்கொண்ட காத்திரமான முயற்சிகள்.
- போராட்டத்தின் போக்கில் தலைதூக்கிய அராஜகங்களுக்கு எதிராகவும் உட்கட்சி ஜனநாயகத்துக்குமான அவனது குரல்.
- சிங்கள முற்போக்கு சக்திகளுடன் உறவுப்பாலமமைத்து எமது போராட்ட நியாயங்களைப் புரியவைப்பதில் அவனது ஈடுபாடு.

இன்னும் எவ்வளவோ;


■ ■ ■

# செழியன் விடுதலையின் ஆத்மார்த்தமான குரல்














## லண்டனில்...
## செழியனின் அஞ்சலிக் கூட்டம்:

‘தமிழ் மக்களுடைய விடுதலைக்கான ஆத்மார்த்தமான குரலாகவும் ஜனநாயகப் போராட்டத்திற்கான போராளியாகவும் திகழ்ந்த கவிஞர் செழியனின் மறைவு, முப்பத்தேழு ஆண்டுகளாக தான் கொண்டிருந்த தோழமையின் உதிர்வாகும்' என்று நா. சபேசன் லண்டன் றைஸ்லிப் சென். மேரிஸ் மண்டபத்தில் பெப்ரவரி 10ம் திகதி, சனிக்கிழமை நடைபெற்ற கவிஞர் செழியனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

1980ன் பிற்கூறில், செழியன் ஆசிரியராக விருந்து சுகு,முத்து, ஜோதிலிங்கம் ஆகியோருடன் இணைந்து ‘மாணவர் குரல்' என்ற பத்திரிகை நடத்தியபோது, செழியனுடன் ஆரம்பித்த நட்புணர்வு, செழியனின் எளிமையான குணத்தாலும் ஒத்த கருத்துகளாலும் இறுதிவரை நீடித்தது என்றும், 1980ல் மாவட்டரீதியான தரப்படுத்தல் முறையால் பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கான வெட்டுப்புள்ளிகள் அதிகமாக அமைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் யாழ் மாவட்டத்தின் சகல பள்ளிகளையும் இணைத்து, யாழ். முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தை நடத்தி முடிப்பதில் செழியனின் ஆத்மார்த்த உழைப்பு அளப்பரியது என்று சபேசன் மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் மூலம் ஆதிக்க சாதியினரின் நில உடைமை அமைப்பின் கீழ். நிலமற்ற வறிய விவசாயிகளுக்கு நிலங்களைப் பங்கீடு செய்யும் புரட்சிகரப் போராட்டத்தைத் தனது சொந்தக் கிராமமான உரும்பிராயில் ஆரம்பித்து, தமிழ்மக்களின் அரசியல் போராட்டத்தில் புதியதொரு பரிமாணத்தை அடையாளப்படுத்தியவர் செழியன் என்றும், அப் போராட்டத்தின்போது உரும்பிராயின் ஆதிக்க சாதியினரின் பெரும் எதிர்ப்பினை அவர் எதிர்கொள்ள நேர்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலையின் மூன்றாம் கட்ட பணிகளின் போது, அடிக்கடி தொழிலாளர்களின் உயிரிழப்பு ஏற்பட்ட போது, நிர்வாகம் அதனைக் கருத்திற்கொள்ளாததைக் கண்டித்து, அத் தொழிற்சாலையின் முன் கண்டனப் பிரசுரங்களை விநியோகித்து, நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்ட சிலரில் செழியனும் ஒருவராவார். EPRLFன் முதல் மகாநாடு தமிழகத்தில் நடைபெற்றபோது, இந்தியா மீதான நிலைப்பாட்டில் செழியன் முரண்பாடான கருத்துக் கொண்டிருந்தார் என்றும், இந்தியத் தலையீடு ஈழப்போராட்டத்தின் போக்கைத் திசை திருப்பிவிடும் என்று செழியன் உறுதியான கருத்துக் கொண்டிருந்தார் என்றும் சபேசன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் நேசமான உறவு கொண்டிருந்த செழியனின் கருத்தியலில் இடதுசாரிச் சிந்தனையும் மார்க்ஸிய அணுகுமுறையும் ஆதிக்கம் செலுத்தியிருந்தது என்றும் தமிழகத்தில் தங்கியிருந்தபோது விக்னேஸ்வரனுடன் இணைந்து, ‘தீக்கதிர்' என்ற பத்திரிகையை நடத்தி, அரசியல் ஈடுபாட்டை செழியன் தொடர்ந்திருந்தார் என்றும், செழியனின் இறுதிப்பத்தாண்டு காலம் கழிவிரக்கத்தில் கழிந்து போயிற்று என்றும், தாங்கள் பங்கேற்ற போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் பங்குபற்றி உயிரிழந்த தோழர்களின் நினைவு அவரை வாட்டியிருந்தது என்றும், அந்தத் தியாகம் வீணாகிப் போய் விட்டதே என்ற கழிவிரக்கம் அவரை இறுதிவரையில் துயரில் ஆழ்த்தியிருந்தது என்றும் சபேசன் நினைவு கூர்ந்தார். சிறுப்பிட்டியில் ஒரு குடிசை வீட்டில் துளசியுடன் ஆரம்பித்த செழியனின் வாழ்வினை நினைவு கூர்ந்து, அவரது துணைவி துளசிக்கும் அவரது இனிய மூன்று புதல்விகளுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார்.

தோழர் ‘பாசறை' முத்து ஸ்ரீதரன் உரையாற்றும் போது, பள்ளிக்காலத்திலிருந்தே செழியனின் சமூக, அரசியல் ஈடுபாட்டைத்தான் அறிவேன் என்றும், ஒருவர் தன் மீதான நம்பிக்கையையும் இழந்து, தான் சார்ந்தவர்கள், தான் சார்ந்த சூழல் மீதும் நம்பிக்கை இழக்கும் போது ஆளுமைச் சிதைவுக்கு உள்ளாகிறார் என்றும், செழியன் பிற்காலங்களில் ஆளுமைச் சிதைவுக்குள்ளாக நேர்ந்தது துரதிஷ்டவசமானது என்றும் தெரிவித்தார்.

1974ல் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோதே ‘மாணவர் குரல்' என்ற கையெழுத்துப் பிரதியை ஆக்கிய முன் முயற்சி, செழியன் எதனையும் துணிச்சலோடு முன்னெடுத்துச் செல்லக்கூடியவர் என்பதற்கு நல்ல சாட்சியமாகும் என்று முத்து மேலும் தெரிவித்தார். ஒரு துண்டுப்பிரசுரத்தை அச்சிட்டு எடுப்பதற்கே நிதி இல்லாத நிலையில், அந்த அச்சகத்தை விலைக்கு வாங்க முடியுமா என்று அந்த அச்சக முதலாளியிடமே பேசிப்பார்க்கும் துணிச்சல் அவரிடமிருந்தது என்றார்.

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தின் கீழ், பாரிய கொங்கிறீற் கற்களைக் கஷ்டப்பட்டுத் தூக்கி அடுக்கிக் கொடுத்துச் சேகரித்த காசில்தான் பத்திரிகை அச்சிட்டோம் என்றும், கௌரிகாந்தனை அறிமுகப்படுத்தி, நிலமற்ற கூலி விவசாயிகளையும், குத்தகை விவசாயிகளையும் ஒருங்கிணைத்து ஸ்தாபனமயப்படுத்தி, ‘கிராமிய உழைப்பாளர் சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பில் செழியன் அர்ப்பணிப்போடு செற்பட்டார் என்றும் தோழர் முத்து நினைவு கூர்ந்தார்.

தேசிய அலை வீசிய காலத்தில், தேசியத்திற்கும் வர்க்கப் போராட்ட அரசியலுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய கலந்துரையாடல்கள் ‘கல்வி வட்டம்' என்ற அமைப்பின் கீழ் நடைபெற்ற போது, ‘உணர்வு' ஏட்டின் சார்பில் தனிநாயகம், சிவகுமார் ஆகியோரும், ‘புதிய பாதை' ஏட்டின் சார்பில் குணரட்னம், சாந்தன் ஆகியோரும், ஜே.வி.பி சார்பில் சிங்கமாப்பாணர், ‘மாணவர் குரல்' சார்பில் முத்து, செழியன், சுகு ஆகியோர் கலந்து கொண்டு செயற்பட்டதையும் முத்து குறிப்பிட்டார்.

சகல இயக்கங்களும் மேற்கொண்டிருந்த அதிகார அடக்குமுறைகள் அனைத்திற்குள்ளும் செழியன் சிக்குப்பட்டு, கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார் என்று தெரிவித்த தோழர் முத்து, ‘மரணங்கள் எமக்கு புதியன அல்ல. நீண்ட அரசியல் போராட்டத்தில் நாம் எத்தனையோ போராளிகளை இழந்து வந்திருக்கிறோம். செழியனின் மரணத்திலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் உள்ளன' என்று தெரிவித்தார்.

எண்பதுகளில் சமூகத்தின் நுண்ணுணர்வு மிக்க முற்போக்கு சக்திகள் ஈழவிடுதலைப் போராட்டத்தில் தீவிரம் கொண்டமைக்கு செழியன் மிகச் சிறந்த குறியீடாகத் திகழ்கிறார் என்றும், செழியனின் கவிதை வரிகள் ஈழ அரசியலின் முகப்புக் கவிதைகளாக அமையவல்லன என்று மு.நித்தியானந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தனது இருபதாவது வயதிலேயே, ‘மரணத்தைக் கண்டு நாங்கள் அஞ்சவில்லை, புதிய எசமானர்களின் கீழ் அனாதைகளாய், நடுவீதியில் மரணிப்பதையே வெறுக்கிறோம்' என்று முரசறைந்த செழியனின் கவிதை வரிகள், வாழ்வின் நெருக்கடியிலிருந்து எழுந்தவை என்றும், தான் உலக கவிஞனாகும் எண்ணம் எல்லாம் அவரிடம் ஒரு துளியும் இருந்ததில்லை என்றும் நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

‘எஞ்சியவை கரித்துண்டுகளாயினும், எழுதியே முடிப்போம்' என்றும் சமூகத்தின் எழுச்சிக் குரலாகவும் ஒலித்த செழியன், தாங்கள் கொண்டிருந்த இலட்சியக் கனவுகள் சிதைந்து போன நிலையில் தங்களின் உழைப்பும் அர்ப்பணிப்பும் அர்த்தமற்றுப் போன சூழலில் புகலிட வாழ்வில் ஒன்றுபடமுடியாமல் தவித்துப் போன ஒரு ஆத்மாவாக மறைந்து போனது துயர் தருவதாகும் என்றும் நித்தியானந்தன் குறிப்பிட்டார்.

‘கண்ணோட்டம்' ஆசிரியர் குழுவைச்சேர்ந்த திரு.தம்பா உரையாற்றுகையில், செழியனின் மறைவிற்காக இலங்கையிலும் கனடாவிலும் லண்டனிலும் நடைபெற்று வரும் அஞ்சலிகள், சமூக உயர்விற்காகப் பாடுபட்ட புரட்சிவாதிகளின் செயற்பாடுகள் என்றும் மரியாதையோடு நினைவு கூரப்படும் என்பதற்கான உதாரணமாகவே திகழ்கிறது. விரக்தியோடும், நிராசையோடும் செழியன் தனது சூழலை எதிர் கொண்டிருக்க வேண்டியதில்லை, இருண்டு போன எல்லாச் சூழ்நிலைகளிலும் ஒளிக்கீற்றுகள் தென்படவே செய்கின்றன என்று தெரிவித்தார்.

திரு. எஸ். சத்தியசீலன், தோழர் திவான் ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர். கனடாவிலிருந்து ஓவியர் கருணா அனுப்பிய அஞ்சலிச்செய்தி கூட்டத்தில் வாசிக்கப்பட்டது. செழியனின் கவிதைகளும், செழியன் எழுதிய ‘வானத்தைப் பிளந்த கதை' நூலின் சில தேர்ந்தெடுத்த பகுதிகளும் அஞ்சலிக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டன.

நம் காலப் போராளிக் கவிஞனுக்கு ஆத்மார்த்தமாக நிகழ்த்தப்பட்ட ஒரு மரியாதைமிக்க அஞ்சலியாக செழியனின் அஞ்சலிக் கூட்டம் அமைந்தது. இந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளராகத் திகழ்ந்த, குறுகிய கால அவகாசத்தில் இந்நிகழ்ச்சியை சிறப்பாக உருவாக்கி, செயற்படுத்தியமைக்கு ஓவியர் கே.கிருஷ்ணராஜாவுக்கு தமிழுலகம் கடமைப்பட்டிருக்கிறது.

■ ■ ■